REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஓகஸ்ட் 3 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්
1932 - 2022

வரு. 90 இல. 181 | Wednesday 03, August, 2022 | 16பக்கங்கள் | 40/-


**கொரோனா பரவல் அதிகரிப்பு**

## தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள ஜனாதிபதி பணிப்பு

தற்போது நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதன் காரணமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொதுமக்களிடம் முக்கிய கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார். பொதுமக்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

06

## 09ஆவது பாராளுமன்றத்தின் 03ஆவது தொடர் இன்று ஆரம்பம்

**ஜனாதிபதி ரணில் தலைமையில் உத்தியோகபூர்வ நிகழ்வு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ஒன்பதாவது பாராளுமன்றத்தின் 03 வது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இன்றுகாலை 10.30 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தொடரை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதுடன் அதனையடுத்து ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையும் இடம் பெறவுள்ளது. பாராளுமன்ற கட்டடத்தில் இன்று நடைபெறும்

06

## டுபாயிலிருந்து 3 கிலோ எடை தங்கம் கடத்தியவர்கள் கைது

**பல செல்போன்களும் கைப்பற்றப்பட்டன**



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 03 கிலோ தங்கம் மற்றும் கையடக்கதொலைபேசிகளை நாட்டுக்குள் கொண்டு வர முற்பட்ட 02 பெண்கள் உட்பட

06

## அரச அலுவலகங்களுக்கு வெள்ளி விடுமுறை ரத்து

**சுற்றறிக்கையை அமைச்சரவை ரத்தாக்கியது**

**ஷம்ஸ் பாஹிம்**



அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்டிருந்த விடுமுறையை இரத்துச் செய்வதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும்

06

**ஜனாதிபதி இல்ல தீ வைப்பு சம்பவம்**

## பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் CID யினரால் கைது

**பிலியந்தலை, நாரஹேன்பிட்டியில் அதிரடி**



கொள்ளுப்பிட்டியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்கு தீ வைத்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவுதெரிவித்துள்ளது.

06



வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றுக் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கொவிட்19 தொற்றுக்கு பின்னர் முதல் முறையாக பெருந்தொகையான அடியார்களின் பங்களிப்புடன் நேற்று விழா ஆரம்பமானது.

(படம் : யாழ்.விசேட நிருபர் மயூரப்பிரியன்)

**மலையகத்தில் சீரற்ற காலநிலை :**

# வெள்ள அனர்த்தங்களில் நால்வர் பலி;மூவர் மாயம்

**11,821 பேர் பாதிப்பு; 3,046 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஹட்டன் சுழற்சி, ஹட்டன் விசேட, தலவாக்கலை குறுப் நிருபர்கள்**

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தங்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காணாமற் போயுள்ளனர்.

நாவலப்பிட்டி, அக்கரவத்தை தோட்டப் பகுதியில் மூவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தொழிலுக்காக சென்ற பெண்ணொருவர் பாலமொன்றைக் கடக்க முற்பட்டு நீரில் அடித்துச் செல்லப்பட்டபோது அவரைக் காப்பாற்ற முயன்ற மேலும் இருவர்

06



## கனவில் கூட லேக்ஹவுஸ் நிறுவனத்தை விற்கமாட்டோம்

**பொய்யான செய்திக்கு அமைச்சர் பதிலடி**

**ஷம்ஸ் பாஹிம்**



எந்தவொரு சந்தர்ப்பத்திலும் லேக்ஹவுஸ் நிறுவனத்தை விற்பனை செய்ய இடமளிக்கப்போவதில்லையென விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் உறுதியளிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்

06

## அந்நிய செலாவணியை அதிகமாக அனுப்புவோருக்கு அதிக சிறப்புரிமை

**சுங்கத் தீர்வையுடன் வாகனம் – வரிச்சலுகையில் பொருட்கள்**

**ஷம்ஸ் பாஹிம்**



வங்கிக் கட்டமைப்பினூடாக இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் இலங்கையருக்கு வழங்கும் வரிச்சலுகையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டில் பணியாற்றும் காலத்துக்கமைய பொருட்களை

06



சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் நேற்று (02) இ.தொ.கா கலந்துரையாடலில் ஈடுபட்டது. இக்கலந்துரையாடலில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு :**

## உணவு பார்சல்கள் வழங்கியோர் தொடர்பில் விசாரணை ஆரம்பம்



**பணம் செலுத்தியோர் குறித்து தீவிரமாக ஆராய்வு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் ஆரம்பித்த தினத்திலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கொழும்பு நட்சத்திர ஹோட்டலொன்றிலிருந்து தினமும் உணவு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும்

06

## டிப்போக்களில் டீசல் பெற்ற தனியார் பஸ்கள் பயணிகளை ஏற்றி செல்லாவிடின் 'லைசென்ஸ்' இரத்து

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எச்சரிக்கை**



இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களிலிருந்து எரிபொருள் பெற்று பயணிகளை ஏற்றிச் செல்லாத தனியார் பஸ்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும்

06

## ஜனாதிபதி ரணிலுடன் பேச்சு நடத்த தயார்

**TNA சிறிதரன் MP தெரிவிக்கிறார்**



தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்துவதற்கு தான் தயாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி, இராமநாதபுரத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு

06

## நாட்டை கட்டியெழுப்புவதற்கு மஹிந்தவின் ஆலோசனை அவசியம்

**அமைச்சர் மஹிந்த அமரவீர யோசனை முன்வைப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கு பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அனுபவங்கள் அவசியமாகுமென விவசாய மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ரணில்

06

**சர்வகட்சி அரசை ஆதரிக்கும் TNA முடிவு**

## முஸ்லிம் தலைமைகளுக்கு நல்லதோர் முன்மாதிரி



**அமைச்சர் ஹாபிஸ் நஸீர் சுட்டிக்காட்டு**

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்ளும் வாசலைத் திறக்க வைத்துள்ளதாக சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் வரவேற்றுள்ளார்.

06

## முன்னாள் ஜனாதிபதிக்கு போதிய பாதுகாப்பு அவசியம்

**வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு**

*-SLPP செயலாளர் சாகர காரியவசம்*

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கு திரும்பி வருவார். அவருக்கு தேவையான பாதுகாப்பு

06

**தமிழக கடற்கரையில் ஒதுங்கிய**

## கடந்த 15 நாட்களில் 800 Kg கஞ்சா மீட்பு



தமிழக கடற்கரைகளில் கடந்த 15 நாட்களில் சுமார் 800 கிலோ கஞ்சா கரையொதுங்கியுள்ளது அங்குபெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை இந்திய கடலோர பாதுகாப்பு பிரிவினர்

06

**புதிய சர்வகட்சி அரசாங்கத்தில்**

## சிறுபான்மை பிரதிநிதி ஒருவருக்கு பிரதமர் பதவி

**நளின் பண்டார MP கருத்து முன்வைப்பு**




குறுகிய காலத்துக்காக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை பிரதிநிதியொருவரை நாட்டின் பிரதமராக நியமிக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்

06

**ஜனாதிபதி செயலகத்துள்**

## அத்துமீறி நுழைந்த முதலாவது நபர் கைது

ஜூலை 09 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஜனாதிபதி செயலக வளாகத்துக்குள் பலவந்தமாக நுழைந்ததாக கூறப்படும் முதலாவது ஆர்ப்பாட்டக்காரரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த



06

## வறிய மாணவர்களுக்கு இலவச பயிற்சி புத்தகம்

**மத்திய வங்கியிடமிருந்து நிதிக்கு ஏற்பாடு**



வறிய மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சிப் புத்தகங்களை வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது. அதற்கான நிதியை ஒதுக்குவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

06

## சந்தர்ப்பவாத அரசியல் செய்ய வேண்டாம்

**எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்**



தற்போது நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்றாலும், அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ளும் அரசியல் சூதாட்டமே அதில் காணப்படுவதாக தெரிவித்துள்ள

06

**ஆப்கானிஸ்தான் பகுதியில்**

## அல்–கொய்தாவின் தலைவர் கொலை

**USA ஜனாதிபதி பைடன் அறிவிப்பு**




ஆப்கானிஸ்தானில் அமெரிக்க சிஐஏ உளவு அமைப்பின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் அல் கொய்தா தலைவர் அய்மன் அல் ஜவாஹிரி கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். கடந்த வார இறுதியில் இந்த ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

2011 இல் அதன் நிறுவனர் ஒசாமா பின் லேடன் கொல்லப்பட்ட பின்னர்

06

## மலைச்சாரல்



### சீரற்ற காலநிலையால்

# 254 குடும்பங்களைச் சேர்ந்த 648 பேர் நிர்க்கதி

## மூன்று பேர் பலி, நான்கு பேர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்









### நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பால் வான் கதவுகள் திறப்பு

### பாடசாலைகளுக்கு விடுமுறை

### பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்







**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி, நோட்டன் பிரிட்ஜ், கினிகத்தேனை தினகரன், மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்**

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 02 நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் காற்றுடன் கூடிய கடும் மழையினால் 254 குடும்பங்களைச் சேர்ந்த 648 பேர் நிர்க்கதியாகியுள்ளதாக நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலகொட தெரிவித்துள்ளார். அனர்த்தங்களில் 3 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் நான்கு பேர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் உறவினர்கள் வீடுகளிலும் தற்காலிக முகாம்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடுபங்களுக்கு நட்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க உள்ளோம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான உலர் உணவுப்பொருட்களையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா, தலாவாக்கலை ஆகிய பகுதியிலேயே அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கினிகத்தேனை பொல்பிட்டிய ஹிம்டிகேகம பகுதியில் வெள்ளத்தால் அடித்துச் சென்ற பாட்டியும் பேத்தியும் பலியாகியுள்ளதுடன் நோட்டன் விதுலிபுர டெப்ளோ ஜனபத பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வட்டவளை கொட்டகலை உள்ளிட்ட பல பிரதேசங்கள் வெள்ளக் காடாய் காட்சியளித்தன.

வட்டவளை பகுதியில் பல வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததன் காரணமாக சுமார் 20 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

ஹற்றன் பகுதியில் பெய்து கடும் மழை காரணமாக ஹற்றன் எம். ஆர். டவுன் பகுதியில் பாரிய கட்டடம் ஒன்று தாழிறங்கியுள்ளது. இதனால் காமினிபுர செல்லும் வீதி பாதுகாப்பு கருதி தற்காலிகமாக நேற்று மூடப்பட்டுள்ளது.நேற்று நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலைகள் நடைபெறவில்லை.

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டெப்லோ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் பலியானதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர். பெய்து வரும் அடை மழையினால் மேல் கொத்மலை நீர்தேக்க பகுதியின் நீர்மட்டம் உயர்வடைந்ததால் நேற்றுக் காலை முதல் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அணைக்கட்டிற்கு கீழ் பகுதியில் ஆற்றை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்தோடு மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டதன் காரணமாக சென். கிளையார் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளமையும் குறிப்பிட்டதக்கது.

இதேவேளை, நுவரெலியா – ஹற்றன் பிரதான வீதியில் தலவாக்கலை நகரத்திற்கு அண்மித்த பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பாதை ஊடான வாகனப் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்தது. பின்னர் பொலிஸாரும், பொது மக்களும் இணைந்து வீதியில் சரிந்துள்ள மண்ணை அகற்றி ஒரு வழி போக்குவரத்தாக மாற்றினர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையால் ஆங்காங்கே மண்சரிவு அனர்த்தங்கள் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு நோட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பன்மூர் குளத்தில் வீழ்ந்த இளைஞனை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

எபோட்சிலி மொன்டிபெயார் தோட்டத்தை சேர்ந்த 22 வயதுடைய மைக்கல் பவன் என்பவரே இவ்வாறு ஆற்றில் வீழ்ந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் ஹற்றன் நகரிலிருந்து இண்டு நண்பர்களுடன் குறித்த இளைஞன் மென்டிபெயார் தோட்டத்திலுள்ள தனது வீட்டிற்கு நடந்து சென்ற போதே வீதியோரத்திலுள்ள குளத்தில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகத்தின் பேரில் இரண்டு இளைஞர்களையும் ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் குளத்தில் வீழ்ந்த இளைஞனை தேடி மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதுடன்

குறித்த இளைஞன் தவறி விழுந்தாரா? கொலையா, அல்லது தற்கொலையா என பல கோணங்களிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்சித்தலைவர்களுடன் கலந்து பேசியே சர்வ கட்சி அரசு உருவாக்கப்பட வேண்டும்

**அக்குறணை குறூப் நிருபர்**



கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசியே சர்வ கட்சி அரசொன்று உருவாக்க வேண்டும். தனித்தனியே பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுவதில் பயன் இல்லை. அது தனிப்பட்ட 'டீல்'களுக்கு வழிவகுக்கும் என கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

கடன் சுமையால் தத்தளிக்கும் இலங்கைக்கு சர்வதேச உதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

சர்வ கட்சி அரசைத் தவிர எந்த ஒரு அரசிலும் பதவிகளை ஏற்க நாம் தயாரில்லை.தற்போது வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் வருமானம் 51 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. நாட்டைப் பற்றிய நம்பிக்கை குறைவே அதற்குக் காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

### இரத்தினபுரி மாவட்டத்தில்

# 1666 குடும்பங்களை சேர்ந்த 6495 பேர் பாதிப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**


இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு நாட்கள் தொடருந்து பெய்து வரும் அடை மழை மற்றும் காற்று, மண்சரிவு உட்பட பல்வேறு அனர்த்தங்கள் காரணமாக இம்மாவட்டத்தில் நேற்று (2) பகல்வரை 1666 குடும்பங்களை சேர்ந்த 6495 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தகம தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் குறித்து நேற்று (2) கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, கொடக்கவெல, எலபாத்த, நிவித்திகல, களவான, அயகம, காவத்தை, வெளிகபொல, பலாங்கொட, பெல்மதுளை, கொலன்ன ஆகிய 11 பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த 65 கிராம சேவகர் பிரிவுகளிலேயே இவ்வாறு அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையக ரயில் சேவைகள் இரத்து

**ஹற்றன் விசேட நிருபர்**



நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை தொடருவதால் மலையகப் பகுதி ரயில் பாதைகளில்

நேற்று ஏற்பட்டுள்ள மண்சரிவு காரணமாக மலையக பகுதிக்கு செல்லும் 12 புகையிரத சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக புகையிரத நிலையத்தின் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு பதுளை பிரதான புகையிரத வீதியில் வட்டவளை, ரொசல்ல, தலவாக்கலை, கலப்பட உள்ளிட்ட பல இடங்களில் பாரிய கற்களும் மண் மேடுகளும் சரிந்து விழுந்துள்ளன. புகையிரத வீதியில் கொட்டிக்கிடக்கும் மண்ணையும் பாரிய கற்களையும் அகற்றும் பணிகள் புகையிரத ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.







சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் நேற்று (2) கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார்.
இவர் ஹற்றன் பிரதேசத்தில் அழுத்கல, நோட்டன் போன்ற பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டார்.
(படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒகஸ்ட் 3 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

01 முதல் 04 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.18 |
| அஸர் | 03.39 |
| மஃரிப் | 06.31 |
| இஷா | 07.44 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 18

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | நன்மை |
| ரிஷபம் | - | தனம் |
| மிதுனம் | - | முயற்சி |
| கடகம் | - | போட்டி |
| சிம்மம் | - | கோபம் |
| கன்னி | - | செலவு |
| துலாம் | - | சுகம் |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | வெற்றி |
| மகரம் | - | பொறுமை |
| கும்பம் | - | மறதி |
| மீனம் | - | பாராட்டு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# இலங்கையில் வேகமாக பரவும் ஒமிக்ரோன் பிறழ்வு

## BA5 குறித்து Prof. சந்திம ஜீவந்தர



உலகில் மிக வேகமாக பரவும் ஒமிக்ரோன் B.A 5 வகை கொழும்பில் பரவ ஆரம்பித்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொற்றுநோயியல் பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

புதிய வகை மாறுபாடு முதன்முறையாக இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த பிறழ்வு காரணமாக அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம்.

கடந்த சில காலமாக உலகம் முழுவதும் கொரோனா அலையை உருவாக்குவதில் இந்த திரிபு வெற்றியடைந்துள்ளதாகவும் பேராசிரியர் சந்திம ஜீவந்தர சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மரபணு பகுப்பாய்வின் படி, இந்த ஒமிக்ரோன் துணை வகை இலங்கையில் பரவி வருவதாக கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தடுப்பூசிகள் மூலம் உடலில் கட்டமைக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும் திறன் இந்தப் புதிய துணை வகைக்குள்ளதென கண்டறியப்பட்டுள்ளதால், கூடிய விரைவில் பூஸ்டர் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் பரவி வரும் B.A 5 உப வகை எதிர்காலத்தில் மிகவும் ஆபத்தானதாக அமையலாமெனவும் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் பல்திருமண அனுமதி:

# இனங்களிடையே முரண்பாடு ஏற்படாத வகையில் தீர்மானம்

**ஷம்ஸ் பாஹிம்**

பல்திருமணம் தொடர்பில் முஸ்லிம் தரப்பிலிருந்து இருவேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு மதம் சார்ந்த விடயம் என்பதால் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படாத வகையில் தேவையான திருத்தம் செய்யப்படுமென நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம், தேச வழமை சட்டம் மற்றும் கண்டிய சட்டம் என்பன தனியார் சட்டங்கள். இவை நாடு சுதந்திரமடைவதற்கு முன்னரிலிருந்து உள்ளவை. அவர்களின் சமய கலாசார மற்றும் சொத்துரிமை தொடர்பில் அவை உருவாக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் சலீம் மர்சூப் தலைமையிலான குழு அறிக்கை சமர்ப்பித்தது. அலி சப்ரி அமைச்சராக இருந்த போதும் சில திருத்தங்கள் நடந்தன. சட்டமூலம் கூட தயாரிக்கப்பட்டது. காதி நீதிமன்ற முறையை இரத்து செய்தல், பெண்ணின் அனுமதியை பெறல், திருமண வயது

06

நாட்டில் சீரற்ற காலநிலை பாதிப்பு

# உடனடி நிவாரண உதவிகளுக்காக கடற்படையின் 48 குழுக்கள் தயார்



நாட்டின் பல பகுதிகளில் பதிவாகும் கடும் மழை காரணமாக, ஆறுகளின் நீர்மட்டம் உயரும் சாத்தியமுள்ள மற்றும் திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு உதவி வழங்குவதற்காக, நேற்று 02 ஆம் திகதி காலை வரை 48 நிவாரண குழுக்களை இலங்கை கடற்படை தயார் நிலையில் வைத்துள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவின் பணிப்புரைக்கமைவாக மேற்கு, தெற்கு மற்றும் வடமேற்கு கடற்படைக் கட்டளைகள் முறையே 27, 08 மற்றும் 13 நிவாரணக் குழுக்களை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக தயார் நிலையில் வைத்துள்ளன.

இதற்கிடையில், கடற்படையினர் 02 வெள்ள நிவாரண குழுக்களை இரத்தினபுரி புதிய நகரத்தில் நிறுத்தியதோடு, மற்றொரு குழு கடந்த 01 ஆம் திகதி மாலை இரத்தினபுரியிலுள்ள முகாமுக்கு விரைந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மையத்துடன் ஒருங்கிணைப்புடன், கடற்படை வெள்ள நிவாரணக் குழுக்கள் உடனடி நடவடிக்கைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

# தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் பொருளாதார வீழ்ச்சிக்கே வழிவகுக்கும்

## கொழும்பு வர்த்தகர்கள் சங்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு முயற்சித்தால் அது நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையவே வழிவகுக்குமென கொழும்பு வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

போராட்டங்கள் மூலம் அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றிருந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் வகையில் அரச மற்றும் தனியார் துறையினர் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 09ஆம் திகதி நாட்டில் மற்றுமொரு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு சில தரப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அந்த சங்கத்தின் செயலாளர் சமிந்த விதானகமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மேற்படி சங்கம் நேற்று நடத்திய ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பு மிக அதிகமாகும். இதனால்

சுற்றுலாத்துறை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

அரச துறையில் ஊழல், வீண் விரயங்களை கட்டுப்படுத்துவதற்காக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் முக்கியமானதாகும்.

ரஷ்ய யுத்தம் காரணமாக சமையல் எரிவாயு விநியோகம் தடைப்பட்டதையடுத்து ஐரோப்பிய நாடுகளின் உல்லாசப் பிரயாணிகள் ஆசிய நாடுகளுக்கு சுற்றுலாப் பயணம் செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எதிர்வரும் நவம்பர் மாதமளவில் சுற்றுலாப் பிரயாணிகளுக்கான காலம் ஆரம்பமாகும் நிலையில் இரண்டு அல்லது மூன்று மாத காலத்தில் நாட்டின் பொருளாதாரத்துக்கு அதன்மூலம் குறிப்பிட்டளவு பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழரின் நியாயமான கோரிக்கைகளுக்கு

# சர்வகட்சி பொது வேலைத்திட்டத்தில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதியின் அழைப்புக்கு அமைச்சர் டக்ளஸ் பதில்



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உட்பட காணிப் பிணக்குகள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் சர்வகட்சி அரசொன்றுக்கான பொது வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கான பொது சேலைத்திட்டத்திற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பங்களிப்பை கோரிக்கையாக விடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பியுள்ள கடிதத்துக்கு பதிலளித்து, தமிழ் மக்களின் சார்பில் பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எழுதிய பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலும் தெரிவித்திருப்பதாவது,

"நாட்டில் இயல்பு நிலையை மீட்டெடுப்பதற்கும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்க்கவுமான சவாலான பணியை முன்னெடுக்க அனைத்து அரசியல் கட்சிகள், நிபுணர்கள், சிவில் சமூகங்கள் போன்றவற்றின் பங்கேற்புடன் ஒரு பொது வேலைத்திட்டத்தை செயல்படுத்தும் தங்களின் கடுமையான முயற்சியை பாராட்டுகிறேன்,

எனது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம்,

06

19,20 திருத்தங்களிலுள்ள நல்ல விடயங்கள் உள்ளடக்கிய

# 22 ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

## அடுத்தவாரம் சபையில் சமர்ப்பிக்கவும் ஏற்பாடு

**ஷம்ஸ் பாஹிம்**



அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்திலுள்ள விடயங்களையும் 20 ஆவது திருத்தத்திலுள்ள நல்ல அம்சங்களையும் உள்ளடக்கியே 22 ஆவது திருத்தம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரதான எதிரணி கோருவது போன்று அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க முடியாதென்று தெரிவித்த அவர், எதிரணி மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் யோசனைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் நேற்று கருத்துத் தெரிவித்த அவர்,

22 ஆவது அரசியலமைப்பு திருத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனை இன்று (நேற்று) வர்த்தமானியில் பிரசுரிக்க அனுப்பியுள்ளதோடு 07 நாட்களுக்குள் முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கிறோம். அதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியும்.

புதிய திருத்தங்களின் பிரகாரம் மத்திய வங்கி ஆளுநரை நியமிக்க ஜனாதிபதி அரசியலமைப்புச் சபையின் அனுமதியை பெற வேண்டும். ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிக்க புதிய திருத்தத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிரணி எதிர்ப்பு தெரிவித்தாலும் முப்படை தளபதி, பாதுகாப்பு

06

பாடசாலைக்கு சமுகமளிக்காமையால்

# தரம் 10 மாணவனுக்கு ஆசிரியர் மோசமாக தண்டிப்பு



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி, கோணாவில் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை ஆசிரியர் மிக மோசமாக தாக்கியதில் மாணவன் கையில் காயம் மற்றும் உட்காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்து'ள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இப் பாடசாலையில் தரம் 10 கல்வி கற்கும் மாணவன் கடந்த வாரம் தனது துவிச்சக்கர வண்டியை தொலைத்ததையடுத்து மூன்று நாட்களாக பாடசாலைக்குச் செல்லவில்லையெனவும், பின்னர் இவ்வாரம் பாடசாலைக்குச் சென்றபோது அந்த மாணவன் பாடசாலைக்குச் செல்லாத நாட்களில் வழங்கப்பட்ட வீட்டுப் பாடங்களை மாணவன் செய்யவில்லை எனத் தெரிவித்து பெரிய தடி ஒன்றினால் மாணவனை தாக்கியுள்ளாரெனவும் இதனால் கையில் காயம் ஏற்பட்டுள்ளதோடு வீக்கம் மற்றும் உட் காயம் காரணமாக மாணவன் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் உப அதிபரின்

06

# 'தேநீர் விருந்துபசார செலவை பாராளுமன்றமே பொறுப்பேற்கும்'

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அழைக்கப்பட்டுள்ள அதிதிகளுக்கு வழங்கப்படும் தேநீர் விருந்துபசாரத்துக்கான செலவை பாராளுமன்றத்தின் மூலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாராளுமன்ற அதிகாரிகள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் 03ஆவது கூட்டத்தொடர் இன்று உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்படுவதையடுத்து மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அழைக்கப்பட்டுள்ள அதிதிகளுக்கென ஏற்பாடு செய்யப்படும் தேநீர் விருந்துபசாரத்துக்கு செலவாகும் நிதியை தாம் பொறுப்பேற்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பித்து வைக்கப்பட்ட பின் ஜனாதிபதியால் கொள்கை விளக்கவுரை நிகழ்த்தப்படுவதையடுத்து சம்பிரதாயபூர்வமாக தேநீர் விருந்துபசாரம் நடைபெறுவது வழக்கம். எனினும் அது பாராளுமன்றத்தின் மூலமே ஏற்பாடு செய்வதாக இதன்போது பாராளுமன்ற அதிகாரிகள் ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

# சீன ஆய்வுக் கப்பல் எரிபொருள் தேவைகளை பூர்த்தி செய்யவே வருகிறது

**ஷம்ஸ் பாஹிம்**

எரிபொருள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே சீன ஆய்வுக் கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவைக்கு அறிவித்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்தக் கப்பல் வேறு எந்த நோக்கத்துக்காகவும் வரவில்லையென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (2) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெருக்கடியான காலங்களில் இலங்கைக்கு உதவ இந்தியா, சீனா உள்ளிட்ட நட்பு நாடுகள் முன்வந்தன.

இந்த விடயத்தை பிரச்சினை எழாத வகையில் இராஜதந்திர ரீதியில் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, சீன கப்பல்கள் இதற்கு முன்னரும் வந்துள்ளன. இது 18 ஆவது கப்பலாகும். எரிபொருள் மற்றும் சேவை நோக்கிலே கப்பல் வருகிறது என்றார்.

சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பில் சில தரப்பினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது தெரிந்ததே. (பா)

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 245.76 | 257.09 |
| கனடியன் டொலர் | 276.47 | 288.75 |
| யூரோ | 364.85 | 379.31 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 255.88 | 266.36 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.26 | 445.24 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 358.53 | 368.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.90 | கட்டார் ரியால் | 98.40 |
| குவைத் டினார் | 1,177.04 | சவூதி ரியால் | 96.37 |
| ஓமான் ரியால் | 939.90 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.51 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 18ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து

தம்மைவிட வலிமையானவர்களை எதிர்ப்பதற்குத் தம்முடன் இருப்பவர்களே அஞ்சும்போது தாம் எதிர்பார்க்கும் பலன் கிட்டுமானால் அவர்கள் வலியோரை வணங்கி ஏற்றுக் கொள்வார்கள்.

# தேசநலனுக்கு முன்னுரிமையளித்து செயற்படுவது அனைவரதும் கடமை

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழுநிலை உடன்படிக்கை இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இறையாண்மை முறிகள் மற்றும் இருதரப்பு கடன் வசதி வழங்குவோருடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஊடகமான ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு வழங்கிய பேட்டியொன்றில் ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி தெரிவித்துள்ள இத்தகவலானது இலங்கைக்கு எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்குமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எமது நாடு தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. இந்நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதாயின் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதுதான் பொருளாதார நி புணர்களின் ஆலோசனையாக உள்ளது. எனவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் இலங்கை தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்கான ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகள் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த முயற்சிகள் சில காலம் முன்னதாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் இலங்கையில் அதற்கான சாதகமான நிலைமை அவ்வேளையில் இருக்கவில்லை. நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் வன்முறைகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்பு கொள்வதென்பது இயலாத காரியமாகவே இருந்தது. தற்போதுதான் அதற்கு ஏதுவான சாதக நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டில் சுமுகமான நிலைமை நிலவினால் மட்டுமே சர்வதேசத்தின் பொருளாதார உதவிகளை எதிர்பார்க்க முடியும். பொருளாதார நெருக்கடி ஒருபுறமிருக்கையில், அரசியல் ஸ்திரமின்மை இல்லாத நாடொன்றுக்கு பொருளாதார உதவிகளை வழங்குவதற்கு சர்வதேசம் முன்வரப் போவதில்லை. எனவேதான் சர்வதேச நாணய நிதியத்தை அணுகுவதற்கு இலங்கை கடந்த சில காலமாக தயங்க வேண்டியிருந்தது.

இலங்கையில் நிலவிய அரசியல் கொந்தளிப்புகள் தற்போது ஓரளவு தணிவு நிலைமைக்கு வந்துள்ளன. போராட்டம் நடத்தியவர்களின் கோரிக்கைக்கிணங்க ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்து கொண்டார். அதனையடுத்து பாராளுமன்றத்தின் பெரும்பான்மை அங்கீகாரத்துடன் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார். இலங்கை அரசியலில் நிலவிய பதற்றங்கள் ஓரளவு தணிவுக்கு வந்துள்ளன.

இனிமேலும் போராட்டங்களைத் தாங்கிக் கொள்வதற்கான சக்தி எமது நாட்டுக்குக் கிடையாது. பொருளாதாரத்தில் எமது நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற இன்றைய நிலையில், தொடர்ந்தும் போரா ட்டத்தில் மக்கள் ஈடுபடுவார்களானால் நாடு மேலும் வீழ்ச்சிக்கே சென்று விடுமென்பது உறுதி. அதன் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதென்பது இயலாத காரியமாகி விடும். இன்றைய நிலையில் எமது நாடு பொருளாதார மீட்சி பற்றியே முதலில் சிந்திக்க வேண்டியுள்ளது. அதன் பின்னரே அரசியல் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ள நாட்டை மீளக்கட்டியெழுப்புவதாயின் அதற்குப் பொருத்தமான ஆட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதே பாராளுமன்றப் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்களின் நம்பிக்கையாகும். எனவேதான் ரணில் விக்கிரமசிங்கவை புதிய ஜனாதிபதியாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்துள்ளனர். அரசியலமைப்பு நடைமுறை வரம்புகளுக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ள தெரிவு இதுவாகும்.

இதுவே ஜனநாயக நடைமுறையாகும். அரசியலமைப்பின்படி தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி ஒருவரின் கீழ் நாடு தற்போது பயணம் செய்து கொண்டிருக்கின்றது. இனிமேலும் எதிர்ப்புப் போராட்டங்களில் எவரும் ஈடுபடுவார்களானால் அதில் அர்த்தமே கிடையாது. நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் திட்டங்களில் மட்டுமே அனைத்துத் தரப்பினரும் கவனம் செலுத்துவது இவ்வேளையில் அவசியமாகும்.

சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்ற உதவிகள் மூலமே நாடு இனிமேல் மீண்டெழ முடியுமென்பதே பரவலான நம்பிக்கையாக உள்ளது. நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் நெருக்கடியைத் தணிப்பதற்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு போதுமான பணத்தைத் தேட முடியுமென மத்திய வங்கி நம்பிக்கை தெரிவித்துள்ளதையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள் வேண்டியுள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி எக்காலமும் தொடர்ந்து கொண்டிருக்க இடமளிக்கக் கூடாது. இலங்கையை இன்றைய இடர்நிலைமையில் இருந்து மீட்டெடுபதற்கு ஒத்துழைப்பு வழங்குவது நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் கடமையாகுமென்பதை மறந்து விடலாகாது. தேசத்தின் நலனும் எதிர்காலமுமே நம் ஒவ்வொருவருக்கும் முதலில் அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# மக்கள் மத்தியில் துவிச்சக்கரவண்டிப் பாவனையை ஊக்குவிக்க கொழும்பு மாநகரசபை வகுத்த திட்டம்



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக மோட்டார் வாகனங்களுக்கான பெற்றோல் மற்றும் டீசல் எரிபொருள் பெற்றுக் கொள்வதில் என்றுமில்லாத சிக்கலான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் நாட்டின் மோட்டார் போக்குவரத்துத்துறையே கஷ்ட நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. முழு தேசமும் தற்போது இச்சிக்கலை எதிர்கொண்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக துவிச்சக்கர வண்டிக்கு என்றுமில்லாத மவுசும்,பெறுமதியும் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் பலர் தமது அன்றாட போக்குவரத்துக்காக துவிச்சக்கர வண்டியை வாகனமாகப் பயன்படுத்துகின்றனர். இதனால் நகர்ப்பறம் உள்ளிட்ட பிரதேசங்களிலும் துவிச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிட வசதிகள் அத்தியாவசியமாகியுள்ளன.

கொழும்பு மாநகரில் தமது அன்றாட போக்குவரத்துக்காக துவிச்சக்கர வண்டியைப் பயன்படுத்தும் மக்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் விஷேட வேலைத் திட்டமொன்றை கொழும்பு மாநகர சபை மேற்கொண்டுள்ளது. இதன் முதற்கட்டமாக சில வீதிகளில் துவிச்சக்கர வண்டிக்காரர்களுக்கான தனியான போக்குவரத்து பாதை ஒழுங்கை ( Bicycle lane) மற்றும் துவிச்சக்கர வண்டிகளை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கான தரிப்பிட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

கொழும்பு பிரதேச மக்கள் மத்தியில் துவிச்சக்கர வண்டி பாவனைக்கு ஊக்கமளித்து ஒத்துழைப்பு வழங்கி மாநகர சபையின் பங்களிப்பை வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் அறிமுகமாகியுள்ளது. இத்திட்டத்தின் முதற் கட்டமாக மேற்படி வசதிகளை செய்து கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான மேலும் பல ஊக்குவிப்புத் திட்டங்களையும் மாநகர சபை அடையாளம் கண்டு வைத்துள்ளதாக மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் கொழும்பு துறைமுக சுற்றுப்புறமாக போக்குவரத்துக்காக ஆமர் வீதியிலிருந்து துறைமுக நுழைவு பிரதேசம் வரையில் துவிச்சக்கர வண்டிகளுக்கான வீதி ஒழுங்கை வசதி ஏற்படுத்தல் நிகழ்வு கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க தலைமையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதி மேயர் எம்.ரீ.எம்.இக்பால் உள்ளிட்ட உறுப்பினர்கள் அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அனைவரதும் ஒத்துழைப்பைக் கோருகிறார் மேயர் ரோஸி சேனநாயக்க

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல பொதுமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களினதும் முறையான ஒத்துழைப்பை மாநகர சபை எதிர்பார்த்துள்ளதுடன், போக்குவரத்து பொலிஸ் பிரிவின் செயல்பாட்டு ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துள்ளது. வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளுக்கான ஒழுங்குகளை அமைப்பதுடன் கொழும்பு நகரில் துவிச்சக்கர வண்டிகளை பாதுகாப்பாக வைப்பதற்கான தரிப்பிடங்களும் அமைக்கப்படவுள்ளன. ஆரம்ப கட்டமாக தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இருபத்தைந்து தரிப்பிடங்களை அமைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.





கொழும்பு மாநகர சபையினால் தற்போது பின்வரும் நகராட்சி பிரதேசக்களில் துவிச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் அடைக்கப்பட்டுள்ளன.

இலங்கை வங்கி மாவத்தை(உலக வர்த்தக நிலைய பகுதி), நொரிஸ் கெனல் வீதி (தேசிய வைத்தியசாலை பிரதேசம்), டீன்ஸ் வீதி, புறக் கோட்டை, துறைமுக பிரதான நுழைவாயில் வீதி, ஜோர்ஜ் ஆர்.டீ.சில்வா மாவத்தை (கொட்டாஞ்சேன பஸ் தரிப்பிட அருகாமையில்), பம்பலபிடி மஜெஸ்டிக் சிட்டி அருகாமையில்

இன்று நாட்டில் தோன்றியுள்ள போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக நாடளாவிய ரீதியில் துவிச்சக்கர வண்டி பாவனை என்றுமில்லாதவாறு உச்சத்தை அடைந்துள்ளது. இதனால் துவிச்சக்கர வண்டி பயணிகளுக்கான தரிப்பிடம் ,பாதுகாப்பு மற்றும் வசதிகளை நாட்டிலுள்ள அனைத்து

உள்ளூராட்சி மன்றங்களும் பொதுமக்களுக்கு விரைவில் செய்து கொடுத்தல் மிகவும் அவசியமானதாகும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# பத்தலங்குண்டு தீவு மக்களின் தண்ணீருக்கான போராட்டம்!





புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி, பத்தலங்குண்டு தீவில் வசிக்கும் மீன்பிடித் தொழிலாளர்கள் பாரிய குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர். கல்பிட்டி பத்தலங்குண்டு தீவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை அழகு மிக்க தீவு ஆகும். அதன் அழகு விபரிக்க முடியாதது.

அது எவ்வளவு அழகாக இருந்தாலும், அங்கு வாழ்பவர்கள் சிரமமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். பத்தலங்குண்டு தீவில் தங்கி வாழ்வோரில் பெரும்பான்மையானவர்கள் மீனவர்கள். அங்கு சுமார் 1500 மீனவர்கள் உள்ளனர்.

சுத்தமான குடிநீர் இன்மையால் அங்குள்ள மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் கடற்கரையில் குழிகளை வெட்டி குடிநீரை பெற்று வருகின்றனர். தண்ணீர் மிகவும் அழுக்கு நிறத்தில் உள்ளது. கடற்கரையில் உள்ள அழுக்கு மணல் தண்ணீரில் கலக்கிறது.

கரைக்கு அருகில் குழிகள் அமைத்து தண்ணீர் எடுக்கும் இடங்கள் ஊற்று எனப்படும். ஒரு வாளி தண்ணீரை நிரப்ப அரை மணி நேரம் ஆகும்.

இவ்வாறு தண்ணீரை எடுத்து வீட்டில் பெரிய பீப்பாய்களில் சேமித்து வைக்கும் போது, சிறிது நேரத்தில் கழிவுநீர் பீப்பாயின் அடியில் படிந்து விடுகின்றது. அதன் பின்னர் அந்தத் தண்ணீரை அங்குள்ள மக்கள் அருந்துகின்றனர். நாளாந்தம் தண்ணீருக்காக இவ்வாறு சிரமப்பட வேண்டியுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

**கே.பிரியங்கர கலுபஹன...**
(வண்ணாத்திவில்லு குறூப் நிருபர்)

# பாங்கசூரன்ஸ் பங்காண்மையை பான் ஏசியா வங்கியுடன் ஏற்படுத்திய யூனியன் அஷ்யூரன்ஸ்

பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, இலங்கையின் வங்கியான பான் ஏசியா வங்கியுடன் கைகோர்த்துள்ளது. இந்தக் கைகோர்ப்பினூடாக நாட்டில் பாங்கசூரன்ஸ் சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் நுகர்வோருக்கு தொடர்ச்சியாக புரட்சிகரமான வங்கியியல் வாடிக்கையாளர் தீர்வுகளை பான் ஏசியா வங்கி அறிமுகம் செய்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, சிறந்த காப்புறுதித் தீர்வுகள் வழங்கப்படும் என்பதுடன், இவற்றில் சேமிப்பு, பாதுகாப்பு மற்றும் முதலீடு போன்றவற்றுடன், பரிபூரண நிதித் தீர்வுகள் அடங்கியிருக்கும். இந்தப் பங்காண்மையில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் மற்றும் பான் ஏசியா பாங்கிங் கோர்பரேஷன் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நிமல் திலகரட்ன ஆகியோர் அண்மையில் கொழும்பிலுள்ள வங்கியின் தலைமையகத்தில் கைச்சாத்திட்டனர்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்தப் பங்காண்மை மிகவும் முக்கியமானது. இலங்கையில் பாங்கசூரன்ஸ் பிரசன்னத்தை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவியாக அமைந்திருக்கும். பான் ஏசியா வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு புதிய தலைமுறை காப்புறுதி அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க இந்த பங்காண்மை உதவியாக அமைந்திருக்கும்" என்றார்.



இடமிருந்து வலமாக ஹெசித் தசநாயக்க நாளிகை (தலைமை அதிகாரி – பாங்கசூரன்ஸ், யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி), விந்தியா கூரே (பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி – யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி), ஜுட் கோம்ஸ் (பிரதம நிறைவேற்று அதிகாரி, யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி),பான் ஏசியா வங்கி முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நிமல் திலகரட்ன, பான் ஏசியா வங்கி பிரதம செயற்பாட்டு அதிகாரி நலீன் எதிரிசிங்க, பான் ஏசியா வங்கி லீசிங் மற்றும் நுகர்வோர் கடன்கள் பிரிவின் உதவி பொது முகாமையாளர் சியான் பெரேரா, பான் ஏசியா வங்கி – கிளை கடன்கள் நிறைவேற்று அதிகாரி ரிவினுவன்.

பான் ஏசியா வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நிமல் திலகரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் இந்த முக்கியத்துவம் வாய்ந்த பங்காண்மையில் கைச்சாத்திடுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இதனூடாக வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு நீண்ட கால அடிப்படையிலான பாதுகாப்பையும் வலுவூட்டலையும் எம்மால் வழங்கக்கூடியதாக இருக்கும்" என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே கருத்துத் தெரிவிக்கையில், "பான் ஏசியா வங்கியுடன் கைகோர்க்க முடிந்தமை உண்மையில் பெருமைக்குரிய விடயமாகும். பாங்கசூரன்ஸ் பிரிவில் முன்னிலையில் திகழ்வதற்கும், வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கும் இந்த பங்காண்மை மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கும்" என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் ஒன்பது முன்னணி வங்கிப் பங்காளர்களின் 600 க்கும் அதிகமான வங்கிக் கிளைகளுடனான பங்காண்மைகளினூடாக பரந்தளவு பாங்கசூரன்ஸ் வலையமைப்பைக் கொண்டுள்ளது. கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது.

# கூட்டுறவு அபிவிருத்தி பிராந்திய அலுவலகத்தில் ஊழல் மோசடி முறைப்பாடுகள் கையளிப்பு

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் சமூக ஆர்வலர்கள் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கிய முறைப்பாட்டினை ஏற்றுக் கொண்டு அது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூட்டுறவுத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கியிருந்தார்.

குறித்த விடயத்தினை கருத்திற் கொண்ட மாகாண ஆணையாளர் இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஒரு குழுவினையும் நியமித்து, அவ்விடயம் தொடர்பில் முறைப்பாட்டாளர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. குறித்த முறைப்பாட்டாளர்கள்



தங்களது முறைப்பாட்டுக்கு மேலதிகமாக இன்னும் பல ஆவணங்களை கூட்டுறவு அபிவிருத்தி பிராந்திய அலுவலகத்திற்கு சென்று கையளித்திருந்தனர். சமூக ஆர்வலர் அஸ்வர் ஷாலி தலைமையில் எம்.ரீ.ஹானிம் மற்றும் யூ.எல்.நிசார் ஆகியோர் அந்த அலுவலகத்திற்குச் சென்று பிரதம கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஐ. எம். பரீட் அவர்களிடம் தங்கள் முறைப்பாடுகளை கையளித்தனர். மேலும் இக்குழுவினர் எதிர்வரும் காலங்களில் மாகாண ஆணையாளர், பிரதம செயலாளர் மற்றும் ஆளுநர் ஆகியோரை சந்திப்பதுடன், அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தினை மீளகட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஒலுவில் மத்திய விசேட நிருபர்

# கண்டி எசல பெரஹறா உற்சவம் ஆரம்பம்





**வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி எசல பெரஹறா உற்சவ நிகழ்வுகள் தற்போது மிகவும் கோலாகலமாக கண்டியில் நடைபெற்று வருகின்றன. கடந்த ஜுலை மாதம் 29 ஆம் திகதி உள்பெரஹறா வீதி ஊர்வலத்துடன் ஆரம்பமான நிகழ்வுகள் எதிர்வரும் 12ஆம் திகதி பகல் பெரஹறா பிரதான நிகழ்வுகளுடன் நிறைவடையும்.**

கண்டியின் நான்கு தேவாலயங்களுடன் தலதா மாளிகையும் இணைந்து சிவன் கோவிலில் காப்புக்கட்டுதலுடன் கடந்த 29 ஆம் திகதி காலை சமய சம்பிரதாய நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து நேற்று (02) மாலை சுபவேளை 6.01 மணியளவில் வீதி ஊர்வலத்துடன் முதலாவதாக கும்பல் பெரஹறா நடைபெற்றது.

எதிர்வரும் 07 ஆம் திகதி மாலை 7.44 மணியளவில் ரந்தோழி பெரஹறா ஆரம்பமாகும். ரந்தோழி ஊர்வல நிகழ்வுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி வரையும் நடைபெறும். மறுநாளான எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 11.45 பகல் பெரஹரவுடன் 'தியா கெப்பீம' நிகழ்வுடன் பெரஹறா நிகழ்வுகள் முடிவடையும்.

இதன் பின்னர் இறுதி நிகழ்வாக கண்டி எசல பெரஹர உற்சவம் சிறந்த முறையில் நிறைவடைந்ததனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும். அன்றைய தினம் வழக்கம் போல் மாலை 5.00 மணியளவில் பெரஹர உற்சவத்தில் கலந்து கொண்ட யானைகளுக்கு ஜனாதிபதியினால் பழங்கள் ஊட்டப்படும். அதனைத் தொடர்ந்து பெரஹறா நிகழ்வுகளில் கலந்து கொண்ட கலைஞர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்படும்.

சிறந்த முறையில் பெரஹறா நிறைவடைந்தமை பற்றிய தகவல் அடங்கிய பேழையை ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே ஜனாதிபதிக்கு வழங்கி வைப்பார். எசல பெரஹர உற்சவத்தை கண்டு களிக்க நாடு முழவதிலுமிருந்தும் நாள்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் கண்டி நகருக்குள் குவிந்த வண்ணம் இருப்பது வழக்கம். ஆனால் இம்முறைஉல்லாசப் பயணிகளின் வருகை குறைவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பக்தர்களுக்காக மிகவும் உச்சக்கட்ட பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அனைத்து வசதிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**எம்.ஏ.அமீனுல்லா...**

# பாராளுமன்ற கூட்டத் தொடர் முடிவுக்கு கொண்டுவரப்படுவது எவ்வாறு இடம்பெறுகின்றது?

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 ஜுலை 28 ஆம் திகதி வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஒகஸ்ட் 03 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகும்.**

பாராளுமன்ற வரலாற்றில் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடப்புப் பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத்தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டமையைக் காண முடியும்.

கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் அதிகாரம் யாருக்குக் காணப்படுகின்றது?

அரசியலமைப்பின் 70(1) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தை கூடுமாறு அழைக்கும், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் மற்றும் கலைக்கும் பூரண அதிகாரம் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது.

புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் தினம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது?

அரசியலமைப்பின் 70(3) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத்திலேயே (வர்த்தமானி அறிவித்தல்) புதிய கூட்டத்தொடருக்கான திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும். அந்தத் திகதி கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் பிரகடனத் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு தினமாக இருக்க வேண்டும்.

எனினும், பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்து மீண்டும் ஆரம்பிக்கும் திகதியை பிரகடனப்படுத்தியிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தை கூடுமாறு அழைப்பதற்கு அரசிலமைப்பின் 70(3) (i) உறுப்புரைக்கு அமைய ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது, அதன் அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்படுவதாக பலர் கருதுகின்றனர். எனினும் அது அவ்வாறு இடம்பெறுவதில்லை.

கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது, சபாநாயகர் தொடர்ந்தும் தனது பணிகளை மேற்கொள்வார். அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்வுகளில் கலந்து கொள்ளவில்லை என்றாலும் அவர்களது உறுப்பினர் பதவிகள் அவ்வாறே காணப்படுகின்றது. எனினும், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது அதுவரை பாராளுமன்றத்தில் காணப்பட்ட அனைத்து அலுவல்களும் இடைநிறுத்தப்படுவதுடன் குற்றப்பிரேரணை (Impeachment) தவிர்ந்த அதுவரை சபையில் இடம்பெற்றுவந்த அனைத்து செயற்பாடுகளும் தற்காலிகமாக நிறுத்தப்படும்.



எனினும், குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக சட்டமூலமொன்று, பிரேரணையொன்றோ அல்லது கேள்வியொன்றோ ஒரே கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக முன்வைக்க முடியாது. ஆனால், கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் எதிர்வரும் கூட்டத்தொடருக்கு கொண்டுசெல்ல வாய்ப்பு உள்ளது.

"பாராளுமன்றத்தின் முன்னர் உரிய முறையில் கொணரப்பட்டுள்ளவையும் பாராளுமன்றத்தின் அமர்வு நிறுத்தப்பட்ட நேரத்தில் முடிவுசெய்யப்படாதிருந்தவையுமான எல்லாக் கருமங்களும், அடுத்த அமர்வின்போது, விட்ட நிலையிலிருந்து தொடர்ந்து கையாளப்படலாம்" என அரசியலமைப்பின் 70(4) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் இந்த ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய அலுவல்கள் இரத்துச் செய்யப்படுவதில்லை. இதன்போது, பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே எதிர்வரும் அலுவல்களை அவ்வாறே முன்னெடுத்துச் செல்ல சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய அரசாங்கத்தின் அலுவல்களை சபை முதல்வர் தீர்மானிப்பதுடன், தனியார் உறுப்பினர் சட்டமூலம் அல்லது பிரேரணை என்பவற்றை மீண்டும் புதிதாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் போது ஒழுங்குப் பத்திரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சபை அலுவல்களை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமானால் அவற்றை மீண்டும் பட்டியலிடுவது அவசியமாகும்.

பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது அனைத்துக் குழுக்களும் இரத்தாகின்றனவா?

பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது பாராளுமன்ற குழுக்களுக்கு என்ன நடக்கின்றது என்பது அனைவருக்கும் எழும் கேள்வியாகும். இதில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 109, 111(2), 124(5), 125(1) என்பவற்றுக்கு அமைய முறையே பாராளுமன்ற விசேட குழுக்கள், துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் இணைப்புக் குழு தவிர்ந்த ஏனைய அனைத்துக் குழுக்களும் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கும் போது மீண்டும் நியமிக்கப்படுகின்றன. இங்கு நிலையியற் கட்டளை 125(1) க்கு அமைய இணைப்புக் குழுவுக்கு உறுப்பினர்கள் பதவியடிப்படையில் (சபாநாயகர், பிரதி சபாநாயகர் போன்ற பதவிகளின் அடிப்படையில்) நியமிக்கப்படுவதனால் அதில் மாற்றம் ஏற்படுவதில்லை.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 114 க்கு அமைய ஒவ்வோர் புதிய கூட்டத்தொடரின் போதும் தெரிவுக்குழு புதிதாக நியமிக்கப்படுகின்றது. இதில் சிறப்பு நோக்கங்களுக்கான கீழே குறிப்பிட்டுள்ள அனைத்துக் குழுக்களும் பாராளுமன்ற கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டுவரும் போது இரத்தாகின்றன.

அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்,சட்டவாக்க நிலையியற் குழு,பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு, சபைக் குழு, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு, பொது மனுக்கள் பற்றிய குழு, பின்வரிசை குழு

பாராளுமன்றத்தின் ஒவ்வோர் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடனம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றது. அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் ஒகஸ்ட் 03ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

அரசியலமைப்பின் 33(அ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒன்றின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும், அரசியலமைப்பின் 33(ஆ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தின் சடங்குமுறையான அமர்வுகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் ஒவ்வோர் கூட்டத்தொடரினதும் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் காணப்படுகின்றது. கடந்த காலத்தில் இது மகா தேசாதிபதியால் வழங்கப்படும் அக்கிராசன உரை என்று அறியப்பட்டது.

1978 முதல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் கொள்கைப் பிரகடனம் இதுவரை விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டோ, வாக்கெடுப்புக்கு விடப்பட்டோ இல்லை. 1947 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை சுமார் 50 தடவைகள் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக பாராளுமன்ற பதிவுகள் குறிப்பிடுகின்றன. 1978 ஆம் ஆண்டு முதல் இதுவரை 25க்கும் மேற்பட்ட பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

**என்.எம்.அமீன்...**

# புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் முதலீட்டு சபையினால் இணையவழி கருத்தரங்கு

**வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான உச்ச நிறுவனமான முதலீட்டுச் சபை (BOI), புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், இலங்கையில் சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிகழ்நிலை இணையவழிக் கருத்தரங்குகளைத் தொடங்கியுள்ளது.**

கடினமான காலங்கள் முதலீட்டாளர்களுக்கு நாட்டில் புதுமையான முதலீடுகளில் ஈடுபடுவதற்கான புதிய வாய்ப்புகளுக்கான ஒரு காலமாக இருக்கும் என்று முதலீட்டுச் சபை கருதுகிறது. எனவே, நாட்டிற்கு புதிய முதலீடுகளைக் கொண்டுவரும் வகையில், சாதகமான திசையில் நகர்வதை உறுதி செய்வதற்கு முதலீட்டுச் சபை முயற்சி செய்கின்றது.

முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் உலக வர்த்தக மையத்தின் மேற்கு கோபுரத்தில் 27வது மாடியில் சமீபத்தில் வெளியிடப்பட்ட முதலீட்டாளர் வசதி நிலையம் (IFC) பற்றிய விழிப்புணர்வை முதலீட்டாளர்களுக்கு இணையவழிக் கருத்தரங்கு தொடர் உருவாக்குகிறது.

உலகெங்கிலும் உள்ள பங்கேற்பாளர்களுடன் உற்பத்தித் துறையை உள்ளடக்கிய ஸூம் மூலம் தொடரின் முதல் நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றது. முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம். வீரகோன் வழங்கிய விளக்கக்காட்சியுடன் 60 நிமிட வலையரங்கம் ஆரம்பமானது. அங்கு அவர் முதலீட்டு சூழல், முதலீட்டு ஊக்குவிப்பு, திறமை மற்றும் கல்வி, சந்தை அணுகல், வாழ்க்கைத் தரம், இருப்பிட நன்மைகள் போன்ற பகுதிகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் 'ஏன் இலங்கை' என்ற தலைப்பில் ஒரு மேலோட்டத்தை வழங்கினார்.

உற்பத்தித் துறைக்கு முதலீட்டுச் சபை வழங்கும் சலுகைகள் மற்றும் வசதிகளைப் பற்றி எடுத்துக்காட்டிய அதேவேளையில், இலத்திரனியல் மற்றும் மின்னியல் உதிரிபாகங்கள், வள்ளம் கட்டுதல், இறப்பர் சார்ந்த பொருட்கள், புடைவை மற்றும் ஆடைகள் உற்பத்தித் துறை, வாகனங்களின் பாகங்கள்,மருந்து,மருத்துவ சாதனங்கள் ஆகியவற்றின் கீழ் வரும் கைத்தொழில்களில் கிடைக்கும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து திருவதி வீரக்கோன் விளக்கினார்.

அமர்வைத் தொடர்ந்து கேள்வி_பதில் அமர்வு நடைபெற்றது, இது பதிவுசெய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் தங்கள் கேள்விகளை சிரேட்ட முதலீட்டுச் சபை அதிகாரிகள் குழுவிடம் முன்வைக்க உதவியது.

சீனா, ஜப்பான், இந்தியா, கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், டென்மார்க், நோர்வே, ஸ்வீடன், பின்லாந்து, துருக்கி, அமெரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 206 பங்கேற்பாளர்கள் பதிவு செய்ததில் இணையவழிக் கருத்தரங்கிற்கு அபரிமிதமான ஆர்வம் இருந்தது.

வலைப்பதிவுத் தொடர் குறித்து கருத்து தெரிவித்த முதலீட்டுச் சபை தலைவர் ராஜா எதிரிசூரிய 'நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் இலங்கையில் முதலீடு செய்வதனை ஊக்குவிப்பதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் வகையில் இவ்வாறான இணையவழிக் கருத்தரங்குத் தொடர் மிகவும் பொருத்தமானது' என்றார்.

இந்தத் தொடரின் அடுத்த இணையவழிக் கருத்தரங்குகள் முறையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உணவுப் பதப்படுத்துதல், சேவைத்துறை மற்றும் பயன்பாட்டுத் துறைகள் போன்ற துறைகளை ஆராய்வதுடன் முதலீட்டுச் சபையின் இணையதளமான www.investsrilanka.com மூலம் அறிவிக்கப்படும்.



ரேணுகா எம். வீரகோன்
முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகம்

# வடக்கின் பசுமைக்கு உதவும் Oriflame

**எமது எதிர்கால சந்ததியினருக்கும், எங்கள் குடும்பத்தாருக்கும் அழகான பசுமையான எதிர்காலம் ஒன்றை எம்மால் உருவாக்க முடியும் என்பதை Oriflame நம்புகின்றது. இதன் காரணமாகவே இயற்கையின் நிலைப்புக்கு.அதனை பாதுகாப்பதற்கு Oriflame திடசங்கற்பம் பூண்டுள்ளது என Oriflame Sri Lanka தீவகப் பணிப்பாளர் லசந்தி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

மில்லியன்கணக்காக உற்பத்திகளை தயாரித்து அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் விநியோகத்தை மேற்கொள்ளும் சர்வதேச அழகுசார் வர்த்தக நாமமான Oriflame இயற்கையுடன் கொண்டுள்ள தாக்கமானது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.காலநிலை,காடுகள் மற்றும் ஆறுகளின் நிலைப்புக்காக எமது தயாரிப்புகளினால் ஏற்படும் தாக்கங்களை குறைப்பதற்காக அரும்பாடுபடும் Oriflame ஐ பிரதிநிதித்துவப்படுத்துவதிலும் அதன் உற்பத்திகளை விற்பனை செய்வதிலும் நாம் பெருமையடைகின்றோம். நீண்டகாலம் நிலைத்திருக்கும் அழகுசாதன உற்பத்திகளை உற்பத்தி செய்யும் எமது நிறுவனமானது முழுமையாக நிலைபேறான ஒரு நிறுவனமாக மாறவேண்டும் என்பதை கடுமையாக நம்புகின்றது.எமது இந்த பயணத்தில் நாம் இதனை அடைய கடுமையாக உழைக்கின்றோம். எமது நிலைபேறான மூலோபாயங்களின் பயனாக எமது சுவீடன் தயாரிப்புகள் சூழல் மீதான தாக்கத்தைக் குறைக்கக் கூடிய சாதகமான சாத்தியப்பாடுகளை கொண்டதாக அமைவதில் கூடிய கவனஞ் செலுத்துகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



எமது நிலைபேறான மூலோபாயங்கள் மூன்று முக்கிய விடயபரப்புகளை கொண்டிருக்கும். இயற்கையையும் அதன் மீது மக்களுக்கு உள்ள வேட்கைக்கும் மதிப்பளித்தல், இயற்கை எமக்கு கொடையாக அளித்துள்ள பாரிய உயிர்ப்பல்வகைமை, வளமான மண், நிலையான காலநிலை மற்றும் தூயவளி, நீர் ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல் போன்ற வாய்ப்புகளை எமது வர்த்தக நாம பிரதிநிதிகளுக்கு வழங்கியுள்ளோம் என்றார் அவர்.

2019ஆம் ஆண்டு தொடக்கம் Oriflame நிறுவனம் உலகளாவிய ரீதியில் இதுவரை 9 மில்லியனுக்கு மேற்பட்ட மரங்களை நட்டுள்ளதுடன், மீள்வனமாக்கற் திட்டம், வனங்களைப் பாதுகாத்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதோடு எமது நாளாந்த செயற்பாடுகளில் மீளப்பயன்படுத்தல், மீள்சுழற்சிற்கு உட்படுத்தக்கூடிய திரவியங்களை குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்தி வருகின்றது.

Oriflame நிறுவனம் பாரிய மரநடுகைத்திட்டம் ஒன்றினை வடக்கில் உள்ள பலாலியில் ஆரம்பிக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.பலாலி பொலிஸ் நிலையம் மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளர் நாலக்க சேனாதீர ஆகியோரினால் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்கு இந் நிறுவனம் 1000 பலா மரக்கன்றுகளை வழங்கியுள்ளது. பலா மரத்திலுள்ள பல்வேறுபட்ட நன்மைகள் மற்றும் பயன்பாடுகளை கருத்திற்கொண்டே இத்திட்டத்திற்கு பலாமரம் தெரிவு செய்யப்பட்டது.



## கனவில் கூட லேக்ஹவுஸ்...

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். இதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று அமைச்சரவையில் முன்வைக்க தாம் கனவிலும் நினைக்கவில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனம் விற்பனை செய்யப்படவுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (02) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் வினவப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தை சுற்றுலா விடுதியாக மாற்றி அச்சுப் பணிகளை வேறு இடத்துக்கு மாற்றினால் என்ன என ஊடக நண்பர்கள் ஒன்று கூடும் போது கருத்து முன்வைக்கப்படுகின்ற போதிலும், அரசாங்கமோ, சம்பந்தப்பட்ட அமைச்சரோ அவ்வாறான ஆலோசனைகளை முன்வைக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார். ஆனால், தற்போது அனைத்து அரச ஊடக நிறுவனங்களும் மிக அதிக நஷ்டத்தில் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், நிலைமையை சமாளிப்பதற்கு அனைத்து ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து புதிய பொறிமுறையொன்றை தயாரிக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிக்கையில்,

இதில் ஜனாதிபதியின் பெயரையும் சிலர் இழுத்துள்ளனர். தனது சொந்த சொத்து அல்லது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் சொத்துக்கள் தொடர்பில் அவர் செயற்பட்டது கிடையாது. தனது தனிப்பட்ட சொத்து தொடர்பில் கூட சிந்திக்காதவர் இந்த சொத்து தொடர்பில் முடிவு எடுப்பாரென நினைக்க முடியாதென தெரிவித்தார்.

## அந்நிய செலாவணியை அதிகமாக...

வாங்க வழங்கும் வரிச்சலுகையை அதிகரிக்கவும் நாட்டுக்கு நேரடியாக அனுப்பும் பணத்தின் தொகைக்கேற்ப சுங்கத்தீர்வையுடன் மின்சார வாகனமொன்றை கொள்வனவு செய்யவும் அனுமதி வழங்க முடிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பிய பணத்தை கொண்டே எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்து என்பன கொள்வனவு செய்யப்படுகின்றன. வங்கிகளினூடாக நேரடியாக அனுப்பும் டொலர் கையிருப்பைக் கொண்டு இந்நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியும்.

அதனை ஊக்குவிக்கவே இந்த சலுகைகள் வழங்கப்படுவதாக தெரிவித்த அவர், இது தொடர்பான சுற்றுநிருபங்கள் விரைவில் வெளியாகுமென்றும் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் மேலும் குறிப்பிட்ட அவர்,

இரண்டாவது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், வங்கிகளின் ஊடாக நாட்டுக்க பணம் அனுப்பும் எந்தவொரு இலங்கையருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கப்படும். ஆனால் 3,000 டொலர்களுக்கு மேல் வங்கி மூலம் பணம் அனுப்பியிருந்தால், அவர்கள் அனுப்பிய பணத்தில் அரைவாசிக்கு மின்சார மோட்டார் சைக்கிள் வாங்கலாம். முச்சக்கர வண்டிகளுக்கு இந்த அனுமதி வழங்கப்பட மாட்டாது.

20,000 டொலர்களிலிருந்து அதிகபட்சமாக 65,000 டொலர்கள் வரை அனுப்புவோருக்கு மின்சார வாகனம் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மின்சாரம் ஏற்ற சூரிய மின்களங்களை அவர்கள் கொள்வனவு செய்ய வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## வெள்ள அனர்த்தங்களில்...

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். லக்ஷபான, பொல்பிட்டிய பகுதியில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 60 வயதான பாட்டியும் அவரது ஐந்து வயது பேத்தியும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

முன்பள்ளியிலிருந்து பேத்தியை அழைத்துச் செல்லும் வழியில் ஓடையொன்றைக் கடக்க முற்படுகையிலேயே அவர்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

அதேவேளை, இதுவரை வெள்ளம் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களில் 11,821 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும்

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் காரணமாக 1,766 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 8,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் 643 குடும்பங்களைச் சேர்ந்த 3,046 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களே சீரற்ற காலநிலை காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்கள் காரணமாக 25 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மத்திய மாகாணத்தில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை மற்றும் மண் சரிவு அனர்த்தம் காரணமாக மலைநாட்டுக்கான சில ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதுடன் நேற்றைய தினம் நுவரெலியா மாவட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் 48 நிவாரணக் குழுக்களை ஈடுபடுத்தியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக இராணுவ குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை சில தினங்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாவலப்பிட்டி பகுதியில் 180 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பிட்டபெத்தர பகுதியில் 151 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி மற்றும் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க ஆறுகள் நீர் நிலைகளை அண்டி வாழும் மக்கள் தமது பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்குக்கு உட்பட்டுள்ள வீதிகளை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் சாரதிகள் இக்காலங்களில் மிக அவதானமாக செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புத்தளம் முதல் கொழும்பு, காலி அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிரதேசங்களில் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென்றும் மேற்படி கடற் பிரதேசங்களில் மறு அறிவித்தல் வரை தொழிலுக்கு செல்ல வேண்டாமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கடற்றொழிலாளர்களை அறிவுறுத்தியுள்ளது.

## முஸ்லிம் தலைமைகளுக்கு...

காலத்துக்கேற்ற இந்த முடிவு, அக்கட்சியின் அரசியல் தீர்க்கதரிசனத்தின் அடையாளமாக உள்ளதாகவும் இது முஸ்லிம் தலைமைகளுக்கு நல்லதோர் முன்மாதிரி எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவை வரவேற்று அமைச்சர் நஸீர் அஹமட் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வகட்சி அரசாங்கம் அவசியம் அமைக்கப்பட வேண்டும். இந்தத் தேவையிலிருந்து பொறுப்புள்ள அரசியல் கட்சிகள் விலகியிருக்க முடியாது. இவ்வாறு சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதில் ஜனாதிபதி அவசரப்படுவது, பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை காப்பாற்றத்தான். இந்தத் தருணத்தை நன்குணர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இரட்டைக் காய்களை பறித்துள்ளது. ஒன்று மக்களின் நெருக்கடியை போக்க உதவுவது, இரண்டாவது தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க தருணம் பார்ப்பது. எனவே, ஒருவகையில் இதுவும்,பேரம் பேசும் சக்தியின் ஒரு வடிவமாகவே பார்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு, முஸ்லிம் தலைமைகள் வியூகம் வகுக்காமலிருப்பது ஏன்? அரசியல் தீர்வில் நாட்டமில்லையா?அல்லது தங்களது சமூகத்துக்கு பிரச்சினைகள் இல்லையென்றா? இத் தலைமைகள் சிந்திக்கின்றன. எனவே, இன்றைய நிலையில் அரசாங்கத்துக்கு எழுந்துள்ள தேவையை அறிந்து முஸ்லிம் தலைமைகளும் இவ்வாறான அரசியல் வியூகங்களை வகுக்க வேண்டும். இழந்து போயுள்ள பேரம்பேசும் பலத்தை இலகுவாக பயன்படுத்த கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை முஸ்லிம் தலைமைகள் தவறவிடக் கூடாதென்றும் அமைச்சர் நஸீர்அஹமட் தெரிவித்துள்ளார்.

## சந்தர்ப்பவாத அரசியல் ...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சந்தர்ப்பவாத அரசியல் செய்யாமல் புதிய கட்டமைப்பின் கீழ் தேசிய ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை எட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் (1) நடைபெற்ற ஒன்றிணைந்த கிராம உத்தியோகத்தர்கள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடுதொடர்பில் சிந்திக்கவும், நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தருணமும் வந்துள்ளதாகவும், சுயநலத்துக்கு பதிலாக, பரோபகார மனோபாவமும் சந்தர்ப்பவாதத்துக்கு பகரமாக நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்கும் மனோபாவமும் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். சலுகைகள், வரப்பிரசாதங்களைப்பெற்று மக்கள் மீது சுமையை ஏற்றுவதற்கு பதிலாக அறிவார்ந்த முறையில் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு சகல கட்சிகளும், எதிர்க்கட்சிகளும், பாராளுமன்ற குழு அமைப்பின் ஊடாக சாதகமான பங்களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த அவர், வரப்பிரசாதங்களை பெற்று கூடிய சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு இது நேரமல்ல எனவும்,தற்சமயம் பங்கேற்பு அபிவிருத்தி மூலம் நாட்டை கட்டியெழுப்புவதே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் தானும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி நம்பிக்கை கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டை கட்டியெழுப்புவதற்கு...

விக்கிரமசிங்க, நாட்டின் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு செயற்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அமைச்சர், அக்கட்சிகளிலுள்ள சிரேஷ்ட மற்றும் அனுபவம் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்வது அவசியமென்றும்தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளிலுமுள்ள அனுபவம் படைத்தவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்து நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்துக்கு பங்களிப்பு செய்வது முக்கியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய தேவை ஆட்சியைக் கவிழ்த்து நாட்டை சீரழித்து அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதல்ல என்பதை சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தைப் பலப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அத்துமீறி நுழைந்த...

38 வயது சந்தேக நபர் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக (01) பொலிஸார் தெரிவித்தனர்.

காலிமுகத்திடலில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஆர்ப்பாட்டத்தின் போது கத்தியை கொண்டு பாதுகாப்பு கடமையில் இருந்த உத்தியோகத்தரை அச்சுறுத்தியுள்ளார்.

அதன் பின்னர் போராட்டகாரர்கள் செயலகத்துக்குள் அத்துமீறி நுழைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வறிய மாணவர்களுக்கு...

இதேவேளை, பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக இந்தியாவில் இருந்து மை மற்றும் காகிதத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்ப தரங்களுக்கு மதிய உணவு வழங்குவது குறித்தும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சிப் புத்தகங்கள் அரச அச்சகத் திணைக்களத்தினால் அச்சிடப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கடந்த 15 நாட்களில்...

முன்னெடுத்திருந்தனர். அதன்படி கடந்த 20 நாட்களுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து கண்ணாடி இழை படகொன்றில் கஞ்சாவை கடத்தி சென்ற போது, கடல் சீற்றம் காரணமாக படகு கவிழ்ந்ததையடுத்து, படகிலிருந்து கஞ்சா மூட்டைகள் கடலில் சிதறி விழுந்துள்ளன. இருப்பினும் படகில் சென்றவர்கள் படகை மீட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளதாக கண்டறிந்துள்ளனர்.

அவ்வாறு தப்பிச் சென்ற கடத்தல்காரர்கள் தொடர்பில் தகவல்கள் எதுவும் கிடைக்காததால் தமிழக பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தனுஷ்கோடிக்கருகில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 96 கிலோ கஞ்சாவை கடலோர பாதுகாப்பு பிரிவினர் கைப்பற்றி அதனை போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

## டுபாயிலிருந்து 3 கிலோ எடை...

06 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக இலங்கைக்கு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது விமான நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சுங்கப் பிரிவினரால் சோதனையிடப்பட்டதன் பின்னர் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அணிந்திருந்த மற்றும் அவர்களின் பயணப் பைகளில் மறைத்து வைத்திருந்த 3.158 கிலோ எடையுள்ள தங்க நகைகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். அத்தோடு அவர்களது பயணப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 39 ஐபோன்களும் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆறு சந்தேக நபர்களில், 45, 48, 50 மற்றும் 51 வயதுடைய நால்வரும் அக்குறணையைச் சேர்ந்தவர்களாவர், இதேவேளை, 40 மற்றும் 41 வயதுடைய நீர்கொழும்பு மற்றும் திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்ட இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ஆறு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையத்திலுள்ள சுங்க திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## அரச அலுவலகங்களுக்கு...

இந்த வாரம் முதல் புதிய நடைமுறை அமுலுக்கு வருவதாகவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்விடயத்தை தெரிவித்தார். நாட்டில் நிலவிய போக்குவரத்து நெருக்கடி காரணமாக வெள்ளிக் கிழமை அரச அலுவலகங்களுக்கு விடுமுறை தினமாக அறிவித்து பொதுநிர்வாக அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. எனினும், தற்போது பொதுப்போக்குவரத்து படிப்படியாக வழமைக்கு திரும்பி வருவதால் வெள்ளிக்கிழமைகளில் அரச அலுவலகங்கள் வழமைபோல இயங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரதான சந்தேகநபர் உட்பட...

குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினர் நேற்று முன்தினமிரவு பிலியந்தலை மற்றும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் வைத்து இவர்களை கைது செய்ததாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மடபாத்த மற்றும் கொழும்பு 05 பிரதேசங்களைச் சேர்ந்த 18 மற்றும் 22 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த ஜூலை 09ஆம் திகதி இடம்பெற்ற மாபெரும் போராட்டத்தின் போது இந்த தீ வைப்பு சம்பவம் இடம்பெற்றது.

## 22 ஆவது திருத்தத்துக்கு... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சராக இல்லாதிருப்பது அரசியலமைப்புக்கு முரணானது.இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு சட்டமும் திருத்தப்படும்.

அமைச்சர் ஒருவர் நீங்கினாலோ நீக்கப்பட்டாலோ அமைச்சின் செயலாளரும் மாற வேண்டும். இது 20 ஆவது திருத்தத்திலுள்ளது. இதனை மாற்றி புதிய செயலாளர் நியமிக்கும் வரை பணியாற்ற அனுமதிக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.(பா)

# குற்றச்சாட்டுக்களிலிருந்து நிமல் சிறிபால விடுவிப்பு

ஷம்ஸ் பாஹிம்

### மீண்டும் அமைச்சராக பதவிப்பிரமாணம்

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக நிமல் சிறிபால டி சில்வா நேற்று (02) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். ஜப்பானின் “தைஸே” (Taisei) நிறுவனத்திடம் இலஞ்சம் கோரியதாக சமூக ஊடகங்கள் உள்ளிட்ட மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்த அனுமதிக்கும் வகையில், நிமல் சிறிபால டி சில்வா சமீபத்தில் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். இதன்படி, ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி திருமதி குசலா சரோஜனி வீரவர்த்தன தலைமையில் மூவரடங்கிய விசாரணைக் குழுவை ஜூலை 22ஆம் திகதி ஜனாதிபதி நியமித்ததுடன், அதன் இறுதி அறிக்கை ஜூலை 31ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

குழுவின் அறிக்கையின்படி நிமல் சிறிபால டி சில்வா அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## 09ஆவது பாராளுமன்றத்தின்...

எளிமையான நிகழ்வில் வழமையாக மேற்கொள்ளப்படும் சிறப்பு மரியாதை பீரங்கி வேட்டுக்கள் இடம்பெற மாட்டாதென்றும் அத்துடன் ஜனாதிபதியின் கொடி ஏற்றப்பட மாட்டாதென்றும் தேசியக்கொடி மாத்திரமே பறக்க விடப்படவுள்ளதாகவும் பாராளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## சிறுபான்மை பிரதிநிதி...

நளின் பண்டார பரிந்துரைத்துள்ளார்.

அத்துடன் நாட்டை இந்தளவுக்கு நெருக்கடிக்குள்ளாக்கிய அஜித் நிவாட் கப்ரால், பி.பி.ஜயசுதந்தர உள்ளிட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டுமென்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் (01) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் ஜனாதிபதிக்கு போதிய...

மற்றும் வசதிகளை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகுமென பொதுஜன பெரமுன பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரஜையான அவருக்கு நாட்டுக்கு திரும்பி வருவதற்கான அனைத்து உரிமையும் காணப்படுவதாகவும் அதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார். அத்துடன், அவர் பொதுஜன பெரமுன கட்சியினூடாக அரசியல் செய்வதற்கு விருப்பம் தெரிவித்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கு கட்சி தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்குத் திரும்பி வந்து இங்கு வாழ்வதற்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் ராமான்ய நிக்காய பீடம் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது.

அந்தப் பீடத்தின் முக்கியஸ்தரான கெப்பெட்டியாகொட சிறிவிமல தேரர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அது தொடர்பில் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

மீண்டும் நாட்டுக்கு திரும்புமாறு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்க தாம் தனிப்பட்ட வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உணவு பார்சல்கள் வழங்கியோர்...

விடயம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.மேற்படி ஹோட்டலிலிருந்து தினமும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு சுமார் 600 உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதென தெரிவித்துள்ள பொலிஸார்,ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து தொடர்ந்து உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

உணவுப் பார்சல்கள் இலவசமாக வழங்கப்பட்டதா அல்லது ஏதாவது அமைப்பின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது கைது செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் வெளிவந்துள்ள தகவல்களை அடிப்படையாக வைத்து இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டிப்போக்களில் டீசல் பெற்ற தனியார்...

வகையில் இந்த பஸ்களின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களில் எரிபொருள் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றது. எனினும் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் சில தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லையென குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. யார் பஸ்களுக்கு அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வதாகவும் இலங்கை போக்குவரத்து சபை அண்மையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

## அல்கொய்தாவின்...

அல் கொய்தா அமைப்புக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அடியாக, அல்ஜவாஹிரி கொலை அமைந்துள்ளது.

"நீதி வழங்கப்பட்டுள்ளது, இந்த பயங்கரவாத தலைவர் இப்போது இல்லை” என்று பைடன் வெள்ளை மாளிகையிலிருந்து தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி ரணிலுடன் ...

குறிப்பிட்டுள்ளார்.

இந்த மண்ணிலே புரையோடிப் போயிருக்கிற இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் பேசுவதற்கு தயாரெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

## தடுப்பூசிகளை செலுத்திக்...

தனிமனித மற்றும் சமூக பாதுகாப்பு கருதி இதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனங்களிடையே முரண்பாடு... 03ஆம் பக்கத் தொடர்

போன்றன தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டது. பல்திருமண அனுமதி தொடர்பில் இரு வேறு கருத்துகள் உள்ளன. அதற்கு அனுமதி வழங்கக் கூடாதென ஒரு தரப்பும் முதல் மனைவியின் விருப்பம் மற்றும் கணவனின் வசதி என்பவற்றுக்கு அமைய வரையறையுடன் அனுமதிக்குமாறு மற்றொரு தரப்பும் கோருகின்றன. முஸ்லிம் சமூகத்துடன் பேசி முரண்பாடு ஏற்படாதவாறு இறுதி முடிவு எட்டப்படும் என அமைச்சர்விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். (பா)

## தரம் 10 மாணவனுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

கவனத்திற்குகொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர். அத்தோடு மாணவன் தற்போது பாடசாலைக்கு செல்ல விரும்பவில்லை என்றும் எனவே அவனை வேறு பாடசாலை ஒன்றில் இணைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பில் பாடசாலை நிர்வாகம் சம்பவம் இடம்பெற்றதை உறுதிப்படுத்தியதோடு இது தொடர்பில் கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## சர்வகட்சி பொது... 03ஆம் பக்கத் தொடர்

19ஆவது திருத்தம் மற்றும் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவை மீள அறிமுகப்படுத்துவதற்கும் மேலதிகமாக ஒரு பரந்த உரையாடலுக்காக முயற்சிப்பதையிட்டு எமது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் தனது 10 அம்சக் கோரிக்கைகளையும் உங்கள் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்



களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள பெருந்தோட்ட பாடசாலைகளுள் ஒன்றான கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தின் திறன் வகுப்பறை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. Vanni Hope (Australia) நிறுவனத்தின் தலைவரும் பணிப்பாளருமான ரஞ்சன் சிவஞான சுந்தரம் மற்றும் DR.மாலதிவரன் அம்மையார் ஆகியோர் கலந்து கொண்டனர். ரட்னம் பவுண்டேசன் (UK) லக்ஷ்மண ஐயர் சசிதரன் குடும்பம் மற்றும் Vanni Hope ஆகிய நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் இத்திறன் வகுப்பறை கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் பயிற்சி பெற்ற ஆப்கான் வீரர்களுக்கு காபூலில் வரவேற்பு

## இந்திய – ஆப்கான் உறவுக்கு காபூல் பச்சை கொடி



இந்தியாவில் இராணுவ பயிற்சி பெற்று ஆப்கானிஸ்தானுக்கு திரும்பிய 25 ஆப்கானிய படை வீரர்களுக்கு தலைநகர் காபூலில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா தொடர்பான தலிபான் அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதையே இது எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அமெரிக்க ஆதரவு அரசின் கீழ் இருந்தபோது சுமார் 80 ஆப்கானிய வீரர்கள் யுத்தப் பயிற்சிக்காக இந்தியாவின் இராணுவ பயிற்சி பாடசாலைக்கு அனுப்பப்பட்டனர். தலிபான்கள் கடந்த ஓகஸ்டில் நாட்டைக் கைப்பற்றியதும் ஆப்கான் தேசிய இராணுவம் கலைக்கப்பட்டது. இதனால் இந்தியாவில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த ஆப்கானிய வீரர்களுக்கு சொந்தநாடு திரும்பிச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே ஆப்கான் அரசிடம் காபூல் இந்திய தூதரகத்தின் ஊடாக இவ் வீரர்கள் தொடர்பாக எடுத்துச் சொல்லப்பட்டது. இவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்தே ஆப்கான் பாதுகாப்பு அமைச்சு அவர்களின் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு குறித்து உத்தரவாதமளித்தது. இதன் பின்னரேயே டேராடூன் இராணுவ பாடசாலையில் பயிற்சியை முடித்திருந்த 25 ஆப்கான் வீரர்கள் காபூல் திரும்பினர்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதும் இந்திய தூதராலயம் மூடப்பட்டு அதன் ஊழியர்கள் டில்லி திரும்பினர். தொழில்நுட்பக் குழு மட்டும் அங்கே தங்கியுள்ளது. எனினும் ஆப்கானிஸ்தானுக்கான மனிதாபிமான உதவிகளை இந்தியா தொடர்ந்து ஆற்றி வந்தது.

இந்திய இராணுவத்திடம் யுத்தப் பயிற்சி பெற்று திரும்பி வரும் வீரர்களுக்கு தொழில் வழங்கவும், பயிற்சியின் பெறுபேறுகளை பயன்படுத்திக் கொள்ள முன்வந்திருப்பது இருதரப்பு உறவுகளின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

## பாரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் வீட்டுக்கு பகுதியளவில் சேதம்



புசல்லாவை தினகரன் நிருபர்

பன்விலை புரன்கும்புர பகுதியில் பெரிய மரம் ஒன்று முறிந்து வீடொன்றில் வீழ்ந்ததால் வீட்டின் ஒருபகுதி சேதமாகியுள்ளதோடு வீட்டிலுள்ளவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். இதன்போது, வீட்டின் ஒருபகுதி மாத்திரம் சேதமடைந்துள்ளது. அத்துடன் மின் கம்பங்களின் கம்பிகளும் அறுந்து வீழ்ந்ததில் அப்பிரதேசம் முழுவதும் இருளில் மூழ்கியதோடு மின்சாரம் தடைப்பட்டதால் தொலைபேசி அலைவரிசைகளும் முற்றாக செயலிழந்துள்ளன.

### தென் மாகாண சபை - இலங்கை

விவசாய கமத்தொழில் அபிவிருத்தி நீர்ப்பாசன நீர் வழங்கல் மற்றும் வடிகான், உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வணிக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

**தென் மாகாணம்**

பசுமை மெகா கூட்டுறவு நகர கடைகள் (Green Mega Coop City Shops) வர்த்தக நிலையங்களிற்காக சுப்பர் வர்த்தக நிலைய உபகரணங்களை வழங்கல், கொண்டு வந்து ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்

**ஒப்பந்த இலக்கம்: SPCOD (கி/2/5/4/2)/ GOODS/NCB/2022/01**


**விலைமனுக்களை ஒப்படைக்கும் காலத்தை நீடிப்புச் செய்தல்**

2022.07.11ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பெறுகைக்கான விலைமனுப்படிவங்களை வழங்கல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் காலம் பின்வருமாறு நீடிக்கப்படுகின்றதென அறிவிக்கப்படுகின்றது.

- விலைமனு ஆவணங்களை வழங்கல் - 2022.08.19 அன்று பி.ப. 3.00 வரை
- விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் - 2022.08.22 அன்று பி.ப. 2.00 வரை
- விலைமனுத்திறத்தல் - விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதும் உடனடியாக.

மேற்படி பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே செல்லுபடியாகும் எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்**
**தென் மாகாண விவசாய அமைச்சு**
**விசாரணைகள்: 091-4943088**










தொழில்துறை

பொது

பாணந்துறை, கெசெல்வத்த ஜும்மா பள்ளி வாசலுக்கு அனுபவமுள்ள முஅத்தின் இருவர் தேவை. 55 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களாகவும் சுன்னத் ஜமாத்தை பின்பற்றுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். Contract No. 0773100735, 0770777730. 044625

**மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை**

இலக்கம் 38, நீர்கொழும்பு வீதி, மினுவங்கொட என்ற முகவரியிலமைந்துள்ள விக்ரமசிங்ஹ அடகு நிலையத்தில் 2021.03.31 இன் பின்னர் அடகு வைத்து ஒரு (01) வருடம் பூரணமாகியுள்ள மீட்டுக் கொள்ளப்படாத அடகு நகைகள் 2022. 08.22 அன்று மு.ப.10.00 முதல் இந்நிலையத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**W.A.J.T.விக்ரமசிங்ஹ**
**முகாமையாளர் - உரிமையாளர்**

**பெயர் மாற்ற அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளுக்கு அமைய அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

கம்பனியின் பழைய பெயர்:
**மெக்லரன்ஸ் ஓடோமோடிவ் (பிரைவட்) லிமிட்டட்**

கம்பனி பதிவு இலக்கம்: PV 104688

கம்பனியின் பதிவு முகவரி:
**இல. 284, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02**

கம்பனியின் புதிய பெயர்:
**கேம்பிரிஜ் புரொப்பர்ட்டீஸ் (பிரைவட்) லிமிட்டட்**

**சபையின் கட்டளைப் பிரகாரம்**

**மெக்லரன்ஸ் குரூப் மெனேஜ்மண்ட லிமிட்டட்**
**செயலாளர்கள்**

### தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை


## பெறுகை அறிவித்தல்

**பயிர்ச் செய்கைக்காக காணியை குறுகிய காலத்திற்கு குத்தகைக்கு விடல்**

**கேள்வி தொடர் இலக்கம் - 928/ Lands - 2/2022**

மேற்படி கேள்வி சம்பந்தமாக 2022.07.14ம் திகதி எம்மால் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம், குறித்த கேள்வி திறக்கப்படும் திகதி 2022.08.03 முதல் 2022.08.15 பி.ப. 2.30 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு-05**
**தொ.பே. இல - 0112501701/2 0115746308**







## Invitation for Bids (IFB)

### VAVUNIYA NORTH PRADESHIYA SABHA
### VAVUNIYA DISTRICT

### *LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)*

(1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of the Local Development Support Project (LDSP). Part of this loan will be used for payments under the contract named below.

(2) The Chairman, Local Authority Procurement Committee (LAPC), on behalf of Vavuniya North Pradeshiya Sabha, Vavuniya District now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No. | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs.Mn) | ICTAD Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period up to | |
| 01 | LDSP/NP/VAV/VNPS/2022// PT - 11-01 | Construction of Vegetable Market at Nedunkerny | 4.552 | C7 & C8 | 45,500.00 | 01.12.2022 | 9I Days |

(3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

(4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and should have valid CIDA registration in Highway Construction for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

(5) Qualification requirements to qualify for contract award are given in Section 5 of the Schedule in the Bidding Document.

(6) Interested bidders may obtain further information from **Chairman,Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny, Vavuniya** [Telephone No: **0242053014** Fax No: **0242053084**] and inspect the bidding documents at the address : **Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny, Vavuniya from 09.00 Hrs to 15.00 Hrs on working Days.**

(7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Chairman, Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny, Vavuniya from 04.08.2022 until 01.09.2022 from 09.00 Hrs to 15.00 Hrs on working Days** upon payment of a non-refundable fee of Two Thousand Five Hundred Rupees (2500.00) for each work. The method of payment will be by cash.

(8) Bids shall be delivered in duplicate to the address : **Chairman,Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny, Vavuniya** on or **before 01st September 2022 at 10.30 Hrs** . Late bids will be rejected. Bids will be opened at the above place soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

(9) Bids shall be valid up to **03rd November 2022.**

(10) All bids shall be accompanied by a *"Bid Security"*, as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above.

(11) Pre-bid meeting will be held on **18.08.2022** at **10.30 Hrs** at the **Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny, Vavuniya.**

The address (es) referred to above is (are):

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC), Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny, Vavuniya.**
**[Fax No: 0242053084]**

# தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

## வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம்








யாழ். விசேட நிருபர்

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 11ஆம் திகதி 10ஆம் திருவிழாவான திருமஞ்ச திருவிழாவும், 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகை உற்சவமும், 23ஆம் திகதி காலை மாம்பழத்திருவிழாவும், 24ஆம் திகதி சப்பரமும் மறுநாள் 25ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

## மடுத்திருத்தலத்தை தூய்மையாக வைத்திருப்போம் பக்தர்களிடம் மன்னார் ஆயர் வேண்டுகோள்

தலைமன்னார் விசேட நிருபர்



கொரோனா தொற்று மீண்டும் தலைதூக்க கடுமையான சுகாதார விதிமுறைகளை பின்பற்றி மக்கள் ஆவணி மடு பெருவிழாவில் கலந்துகொள்ளுமாறு மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னாரில் எதிர்வரும் மருதமடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற ஆயத்தக் கூட்டத்தை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இவ்வருடம் ஆவணி 15ஆம் திகதி (15.08.2022) நாங்கள் மருதமடு செபமாலை மாதாவின் திருவிழாவை தொடர்ந்து வழமை போன்று கொண்டாடவிருக்கின்றோம். ஆயத்தக் கூட்டத்துக்கு சகல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். வழமைபோன்று ஆவணி மாத மடு பெருவிழாவை பெருந்திரளான பக்தர்களுடன் கொண்டாடுவதற்கான எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம். சென்ற வருடம் (2021) கொரோனா தொற்று நோய் காரணமாக விழாவின்போது ஒரு திருப்பலிக்கு 400 பேர் என்ற விகிதத்திலேயே பக்தர்கள் கலந்து கொள்ளும் நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்வருடமும் மீண்டும் கொரோனா தொற்று நோய் தலைதூக்கும் நிலையிலேயே இவ்விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

ஆகவே நாம் சுகாதார நடைமுறைகளை கவனத்தில் எடுத்து இவ்விழாவில் கலந்து கொள்வோமானால் நாம் கட்டாயமாக முகக் கவசம் அணிந்தவர்களாக திருவிழாவில் பங்கெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அத்துடன் இப்பொழுதே பலர் இங்கு வந்து கூடாரம் அமைத்து விழாவில் கலந்து கொள்வதற்காக வந்து கொண்டு இருக்கின்றார்கள்.

அத்துடன் எந்தவித சண்டை சச்சரவும் இன்றி அமைதியை இழக்காமல் மது மற்றும் போதைவஸ்து பாவனைகளிலிருந்து விடுபட்டு யாத்திரிகர்களாக வருவோர் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

### மடு ஆவணி பெருவிழாவை முன்னிட்டு

# கொழும்பு, அனுராதபுரத்திலிருந்து மடுவுக்கு விஷேட ரயில் சேவை

### அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல்

(தலைமன்னார் விஷேட நிருபர்)



மன்னார் மறைமாவட்டத்தின் மடு பெருவிழாவை முன்னிட்டு கொழும்பு, மடு மற்றும் அனுராதபுரத்திலிருந்து மடு புகையிரத நிலையத்துக்கும் விஷேட ரயில் போக்கு சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் எதிர்வரும் மருதமடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற முன்னேற்பாட்டு கூட்டத்தைத் தொடர்ந்து மன்னார் அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

இவ்வருடம் ஆவணி 15 ந் திகதி நடைபெறுவதற்கான மடு அன்னையின் திருவிழாவுக்கான முன்னேற்பாடு கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (01.08.2022) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் மடு திருத்தலத்தின் பரிபாலகர் ஏனைய திணைக்கள தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த ஏனைய உத்தியோகத்தர்களோடு இது தொடர்பாக கலந்துரையாடினோம்.

அதன் அடிப்படையில் தற்பொழுது உள்ள சூழ்நிலையில் எரிபொருள் நெருக்கடி காணப்பட்டபோதும் மடு ஆலய பெருவிழாவுக்கு நான்கு இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு இப்பொழுது காணப்படுகின்றது

ஆகவே இதற்கிணங்க பக்தர்களின் நலன் நோக்கி நாங்கள் திணைக்களங்களின் சேவைகள் தொடர்பாக ஒழுங்குபடுத்தியுள்ளோம்.

அதேவேளையில் விஷேட ரயில் சேவை இவ் விழாவை முன்னிட்டு கொழும்பிலிருந்து மடு புகையிரத நிலையத்துக்கும் அத்துடன் அனுராதபுரத்திலிருந்து மடு புகையிரத நிலையத்துக்கும் எதிர்வரும் 13,14, 15 ஆம் திகதிகளில் சேவைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

இவ்வாறு பஸ் போக்குவரத்து மடு புகையிரத நிலையத்திலிருந்து மடு ஆலயத்துக்கும் இணைப்பு சேவைகளும் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் 19 தொற்று நோய் மீளவும் ஆரம்பித்துள்ளமையால் பொது மக்கள் கட்டாயமாக முகக் கவசம் அணிந்து வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

## வெளிச்சம் பாய்ச்சி கடலட்டை பிடித்த 15 பேருக்கு தண்டப்பணம்

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியில் அனுமதிக்கப்படாத இரவு நேரத்தில் வெளிச்சம் பாய்ச்சி கடலட்டை பிடித்த 15 பேருக்கு தலா பத்தாயிரம் மற்றும் பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியில் அனுமதிக்கப்படாத இரவு நேரத்தில் வெளிச்சம் பாச்சி கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி நாச்சிகுடா கடற்பரப்பில் சட்டத்துக்கு முரணான வகையில் அனுமதிக்கப்படாத இரவு வேளைகளில் வெளிச்சம் பாச்சி கடலட்டை பிடித்த 15 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவர்களை நேற்று (01.08.2022) கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது ஒருவருக்கு 15,000 தண்டபணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவருக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டபணம் விதிக்கப்பட்டுள்ளது.

## யாழில் எரிபொருள் பெற பொலிஸாருக்கு கட்டுப்பாடு

யாழ்.விசேட நிருபர்

வாகனங்களை வரிசையில் விட்டுவிட்டு, எரிபொருள் நிரப்பு நிலையத்தைச் சூழ அதிகளவானோர் நிற்பதை அனுமதிக்க வேண்டாம் எனவும் அதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மாவட்ட செயலரின் தலைமையில் பிரதேச செயலர்கள், இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், பொலிஸார் ஆகியோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன்போது, தற்போது 'கியூஆர்' நடைமுறையின் கீழ் எரிபொருள் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதனை ஒரு வாரத்துக்கு அவதானித்து அதன் பின்னர் கிராம அலுவலர் பிரிவு ரீதியான எரிபொருள் விநியோகத்தை நடைமுறைப்படுத்துவதை ஆராயலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் விமான நிலையம் செல்வோர் கொழும்புக்கு செல்லும் வாகனங்களுக்கு பிரதேச செயலரின் பரிந்துரையுடன் இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளில் (டிப்போ) எரிபொருள் நிரப்ப முடியும். அந்த வாகனத்துக்கு 'கியூஆர்' நடைமுறைக்கு அமைவாக 40 லீற்றர் டீசல் பெற முடியும் என்பதால், போக்குவரத்துச் சபை எஞ்சிய 60 லீற்றர் டீசலையே விநியோகிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மரக்கறிகளை கொண்டு செல்லும் வாகனங்களுக்கும் இவ்வாறு டீசல் விநியோகிக்க இலங்கை போக்குவரத்துச் சபை இணங்கியுள்ளது.

அத்துடன் பாடசாலை சேவைகளில் ஈடுபடும் வாகனங்கள், தனியார் பேருந்துகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வாகனங்கள், இலங்கை மின்சார சபையின் வாகனங்கள், ரெலிக்கொம் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை விநியோகிக்க வேண்டாம் என்றும் அவர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலையில் வழங்கப்படும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் வரிசையில் மோதல் புடவைக்கடை சேதம்

யாழ். விசேட, பருத்தித்துறை நிருபர்கள்



யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டி பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் அப்பகுதியிலுள்ள புடவை விற்பனை நிலையமொன்று சேதமாக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் விற்பனை நிலையம் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தில் விற்பனை நிலையத்தின் கண்ணாடி கதவுகள் அடித்து நொறுக்கப்படுள்ளதுடன் புடவை விற்பனை நிலையத்தின் உரிமையாளரும் தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் புடவை விற்பனை நிலைய உரிமையாளரினால் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கட்டுத்துப்பாக்கி வெடித்து பெண் காயம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா ஈச்சங்குளம் சாலம்பன் பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (01.08) காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா கல்மடுவ பகுதியை சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். பெண் தமது வீட்டின் பின்புறமுள்ள காட்டுப்பகுதியில் விறகு சேகரித்து கொண்டிருந்தபோது விலங்குகளை வேட்டையாடுவதற்காக பயன்படும் கட்டுத்துப்பாக்கி வெடித்துள்ளது. இதனால் காயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாள்களுடன் நடமாடிய ஒருவரை ஊர்மக்கள் மடக்கி பிடிப்பு

யாழ்.விசேட நிருபர்

வட்டுக்கோட்டையில் திருட்டு, கொள்ளை மற்றும் வழிப்பறி அதிகரித்துவரும் நிலையில் வாள்களுடன் மக்களை அச்சுறுத்திய வந்த ஒருவர் ஊர் இளைஞர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

சங்கரத்தைச் சந்தியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வட்டுத்தெற்கு மற்றும் மூளாய் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு வாள்களுடன் நடமாடியுள்ளனர்.

அதனை அவதானித்த வட்டுக்கோட்டை இளைஞர்களில் ஒருவர் சந்தேகம் கொண்டு வழிமறிக்க முற்பட்ட வேளை மூவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி வீதியில் வீழ்ந்துள்ளனர்.

அவர்களில் இருவர் வாள்கள் இரண்டை கைவிட்டு தப்பித்துள்ளனர். ஒருவர் காயங்களுடன் பொதுமக்களிடம் மாட்டிக் கொண்டார்.

வாள்களுடன் சிக்கிக்கொண்ட மூளாயைச் சேர்ந்தவர் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இரண்டு வாள்கள் மற்றும் மோட்டார்களையும் பொலிஸார் கைப்பற்றி எடுத்துச் சென்றனர்.

# கிழக்கின் குரல்



## மண்முனை தென்மேற்கு செயலகப்பிரிவில் கிவ், ஆர் முறையில் எரிபொருள் விநியோகம்

**கொக்கட்டிச்சோலை நிருபர்**

புதிதாக அறிமுகஞ்செய்யப்பட்ட கிவ்.ஆர். நடைமுறையின் கீழ்,மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில், நேற்று(02) செவ்வாய்க்கிழமை எரிபொருள் வழங்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களுக்கென ஒருவரிசையும், பொது மக்களுக்கென இன்னுமொரு வரிசையும் ஒழுங்குப்படுத்தப்பட்டு கிவ்.ஆர்.பரிசோதிக்கப்பட்டு எரிபொருள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட வரிசை காணப்பட்ட போதிலும், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கூட்டுறவு சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் இணைந்து சுமுகமான முறையில் எரிபொருளை வழங்கியிருந்தனர்.

**வைத்தியசாலைகளில் பயன்படாது**

# தேங்கி கிடந்த உபகரணங்களை திருத்தி மீன் பாவனைக்கு ஒப்படைத்துள்ளோம்

**(வாச்சிக்குடா விஷேட நிருபர்)**



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலைகளில், பயன்படுத்தப்படாது தேங்கி கிடந்த உபகரணங்களை,திருத்தம் செய்து மீள் பாவனைக்கு கையளித்துள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார். சுமார் இருநூறு மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் இவ்வாறு மீளத் திருத்தம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பனங்காடு வைத்தியசாலை யில் இரண்டு கோடியே 20 இலட்சம் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்துக் கு அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது,

உலக வங்கியால் மேற்கொள்ளப்படும் ஆரம்பகட்ட சுகாதார வலுவூட்டல் திட்டத்தின் கீழ், இவ்வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

அரசியல்வாதிகள், அரசாங்கத்தின் மீது குறை சொல்லாமல் அரச அதிகாரிகளாகிய நாம் சரியாக செயற்படுகின்றோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதைத் திறம்படச் செய்ய பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம். அவ்வாறு செயற்படும் போதுதான், நாட்டை கட்டியெழுப்ப முடியும். மாற்றம், நம்மிலிருந்தே ஆரம்பமாக வேண்டும். கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக, பொறுப்பேற்ற பிற்பாடு எனது குழுவுடன் இணைந்து வைத்தியாசாலைகளில் பாவனையற்றுக் கிடந்த பொருட்களை இனங்கண்டேன். அவற்றை திருத்தியே மீள் பாவனைக்காக கையளித்துள்ளோம். குறைபாடுகள், தேவைகள் உள்ளதாகவே சில நிர்வாகிகள்

முறைப்பாடு செய்கின்றனர். இந்நிலை பனங்காடு வைத்தியசாலையில் இல்லை.

வைத்தியசாலை நிருவாகம், வைத்தியசாலை அபிவிருத்தி குழு, சமூக அமைப்புக்களின் உதவிகள் கிடைப்பதே இதற்கான காரணமாகும்.இனமத பேதங்களை கடந்து தேவை எங்குள்ளதோ அங்கு எனது சேவை தொடரும்.

இக்கட்டான இச்சூழலில் இவ்வாறான அபிவிருத்தி தேவைதானா? எனச் சிலர் விமர்சிக்கின்றனர். குறித்த வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, திரும்பிச் செல்லாதிருக்கவே இவ்வேலைத் திட்டத்தை ஆரம்பித்ததாகவும் அவர் கூறினார்.

## அறுகம்பை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் கலந்துரையாடல்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

பொத்துவில் அறுகம்பை சுற்றுலாத்துறையை எதிர்வரும் காலத்தில் சிறப்பான முறையில் அபிவிருத்தி செய்வது சம்பந்தமான கலந்துரையாடலொன்று, பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.ஏ. றஹீம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) அறுகம்பை சுற்றுலா விடுதியில் நடைபெற்றது.

நாட்டிற்கு வருமானம் ஈட்டும் முக்கிய துறையாக சுற்றுலா துறை உள்ளது.

இந்த வகையில்,அறுகம்பை பிரதேசத்தை அபிவிருத்தி செய்து, சுற்றுலாத்துறையினரை உள்ளீர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடலில்பொத்துவில் பிரதே சபை தவிசாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பாதுகாப்பு பிரிவினர், அரச உயரதிகாரிகள், விடுதி உரிமையாளர்கள், சுற்றுலாத் துறை பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு கள்ளியங்காடு ச.தொ.சவுக்கு அமைச்சர் விஜயம்

**கல்லடி குறூப்நிருபர்**



பொருட்களின் விலைகளை குறை ப்பதன் அவசியம் குறித்து ஜனாதிபதியுடன் பேசியுள்ளதுடன், இது தொடர்பில் அமைச்சரவையிலும் தெரிவித்துள்ளதாக வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு நேற்று (02) விஜயம் செய்த அமைச்சர், கள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சதொச மொத்த விற்பனை நிலையத்தை பார்வையிட்டார். இதில் கலந்துகொண்டோரு டன் உரையாடும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விஜயத்தின்போது, கள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சதொச மொத்த விற்பனை நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர், இவ்வேலைத் திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்யுமாறு அதிகாரிகளைப் பணித்தார்.

இவ்வளாகத்தில் தற்காலிமாக நிறுவப்பட்டுள்ள சத்தொச விற்பனை நிலையத்தையும் பார்வையிட்டதுடன்,அங்குள்ள குறைபாடுகளை அதிகாரிகளிடமும், பொருட் கொள்வனவில் ஈடுபட்ட வாடிக்கையாளர்களிடமிருந்தும் கேட்டறிந்துகொண்டதுடன், காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கான ஏற்பாடுகளையும் உடன் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பொருட் கொள்வனவில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் தமக்கு பால்மா கிடைப்பதில்லையென கூறினார். இதையடுத்து தொலைபேசி வாயிலாக உரிய அதிகாரியை தொடர்பு கொண்ட அமைச்சர், மாவட்டத்திற்கென இலவசமாக ஒரு தொகுதி பால்மாவை அனுப்பி வைக்குமாறு பணித்தார்.

அமைச்சருடன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்துகொண்டனர்.

## இராணுவ வாகனம் தடம்புரண்டு இடைவிலகிய இராணுவ வீரர் காயம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலைஹொரவ்பொத்தானை பிரதான வீதி மஹதிவுல்வெவ குளத்துக்கருகில் இடம்பெற்ற வாகன விபத்தில், இராணுவ வீரரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று (02) இடம்பெற்ற இவ்விபத்தில்,காயமடைந்தவர் சேவையிலிருந்து இடைவிலகியவராவார்.

இவ்விபத்தின் போது மொரவெவதெவனிபியவர பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ரொஷான் திலின (22 வயது) என்பவரே படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாது இராணுவத்திலிருந்து இடை விலகிய இராணுவ வீரர்களை கைது செய்வதற்காக திருகோணமலை இராணுவ முகாமிலிருந்து, கெப்வாகனம் சென்றது. இதில்,பல வீரர்களை கைது செய்து,ஏற்றிவந்த வாகனமே

வேகக்கட்டுப்பாட்டையிழந்து மின்கம்பத்துடன் மோதியது.

இவ்விபத்தில், இடை விலகிய இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளதுடன், மற்றுமொரு இராணுவ வீரர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த கெப் வாகனத்தின் சாரதியான இராணுவ வீரரை கைது செய்துள்ளதாகவும் விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு மாகாண நிறுவனங்களின் தலைவர்களுக்கு இடமாற்றங்கள்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக ஒரே பதவியில் கடமையாற்றிய திணைக்களத் தலைவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் ஆலோசனைக்கு அமைய இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக ஒரே திணைக்களத்தில் பணிபுரிந்ததாலும், அந்த பதவிகள் தொடர்பான தகுதிகளை பூர்த்தி செய்யாததாலும், இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டன.

இவர்கள் தொடர்பில்,கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு, மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்கவிற்கு ஆளுநர், அறிவுரை வழங்கினார்.

இதன்படி, மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளராக கடமையாற்றியவர், மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய என். திரு.சிவலிங்கம், மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கூட்டுறவு ஆணையாளராக கடமையாற்றிய ஏ.எல்.எம். அஸ்மி கல்முனை மாநகர சபை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கலாசார பணிப்பாளராக கடமையாற்றிய திரு.எஸ்.நவநீதன், மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராகப் பணியாற்றியவர், மாகாண கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மாகாண கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகப் பணியாற்றியவர் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக பணியாற்றியவர் மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்க தலைமையில் வழங்கப்பட்டன.

புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நேற்று (02) காலை திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்து விஷேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

## பராமரிப்பற்ற காணிகளில் குப்பைகள் கொட்டுவதை தடுக்க விஷேட திட்டம்

**தோப்பூர் குறூப் நிருபர்**

பராமரிப்பற்ற அரச மற்றும் தனியார் காணிகளில் இரவு வேளைகளில் குப்பைகள் கொட்டும் நடவடிக்கைகளில் சிலர் தொடர்ந்தும் ஈடுபடுவதாகவும்,இவற்றை நிறுத்த

பொதுமக்களின் உதவியை நாடுவதாகவும் மூதூர் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஹில்மி முகைதீன் பாவா (2) தெரிவித்தார்.

மூதூர் சுகாதார வைத்தியதிகாரி பிரிவிற்குற்பட்ட பகுதிகளில், பராமரிமிப்பின்றியுள்ள காணிகளிலே குப்பைகள் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளால், பல்வேறு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இதைத் தடுப்பதற்கு போதிய ஆளனியோ, தொழிநுட்ப மற்றும் இயந்திர வசதிகளோ போதியளவில் இல்லை. எனவேதான், இவற்றை தடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்புக் கோரப்படுகிறது.

இச்சவால்களை வெற்றிகொள்வது சம்பந்தமான கலந்துரையாடல், நேற்று (02) மூதூர் பிரதேச சபை தவிசாளர், மூதூர் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மற்றும் மூதூர் பிரதேச கிராம சேவகர்களுடன் நடாத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதன்போது, கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான செயற்பாடுகள் சம்பந்தமாகவும், மக்களுக்கு இது தொடர்பாக விழிப்பூட்டுதலின் அவசியம் பற்றியும் ஆலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## காத்தான்குடியில் ஷுஹதாக்கள் தினம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தன்குடியில் 32ஆவது ஷுஹதாக்கள் தினம் இன்று (03) புதன்கிழமை அனுஷ்டிக்கப் படுகிறது.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல், காத்தான்குடி முதலாம் குறிச்சி ஹுஸைனிய்யா பள்ளிவாசல் ஆகிய பள்ளிவாசல்களிலும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து இந்த ஷுஹதாக்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. 1990,08,03 அன்று, இப்பள்ளிவாசல்களில், இஷாத்தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள்,பயங்கரவாதி களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில்,103 பேர் ஷஹீதாக்கப்பட்டனர்.

இவர்களை நினைவு கூர்ந்தே ஷுஹதாக்கள் தினம் அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றது.

தாக்குதல் நடாத்தப்பட்ட இரண்டு பள்ளிவாச ல்களிலும் இந்நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

காத்தான்குடி முதலாம் குறிச்சி ஹுஸைனிய்யா பள்ளிவாசலில், காலை ஒன்பதுமணிக்கும், காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலில் மஹ்ரிப் தொழுகைக்குப் பின்பும் விஷேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

குர்ஆன் ஓதுதல், விஷேட பிராத்தனை எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாக பள்ளிவாசல் நிருவாகிகள் தெரிவித்தனர்.

## ஏறாவூர் பொதுச்சந்தையில் கடைகள் வைத்திருந்தோரை அடையாளம் காணல்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச்சந்தையில் 1987ஆம் ஆண்டு காலத்தில் இறுதியாக கடைகளை வைத்திருந்த பொதுச்சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக விடயத்திற்கு நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகரசபைக் குழு தெரிவித்துள்ளது.

தற்போது தூர்ந்து சிதைவடைந்து போய்க்கிடக்கும் ஏறாவூர் நகரசபைக்குரிய பொதுச் சந்தையை நவீனமயப்படுத்தி மீளத் துவங்குவதற்கான முயற்சியாக இந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இந்த சந்தை கிழக்கில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயங்காதுள்ளது.



இதனடிப்படையில், இந்த சந்தை கடைசியாக இயங்கியபோது, அங்கு கடைகள் வைத்திருந்த சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் முதற்கட்ட நடவடிக்கையாகவே இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடைகளைக் வைத்திருந்தமைக்கான ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு சந்தை வியாபாரிகள் 93 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இதுவரை 31 வியாபாரிகளே,ஏறாவூர் நகர சபைக் குழுவினரிடம் முன்னிலையாகியதாக அக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் 61 பேர் ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளனர். ஏனையோர் அறிவிக்கப்பட்ட தினங்களில் முன்னிலையாகுவர் என தாம் எதிர்பார்ப்பதாகவும் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

பொதுச் சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் விடயத்திற்கென நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகர சபைக் குழுவில் மாகாண சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் என். ஐங்கரன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ஹாறூன், வருமானப் பரிசோதகர் என். வாஹித், நகர சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். பாத்திமா ஸப்ரினா உட்பட நான்கு நகர சபை உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

# நகர்வலம்



# நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணிலுக்கு சிறிது காலம் அவகாசம் வழங்க வேண்டும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறிது காலம் அவகாசம் வழங்க வேண்டுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மாதத்திற்கு ஒரு முறை அல்லது 2 மாதங்களுக்கு ஒரு முறை புதிய ஆட்சியாளர் ஒருவரை நியமித்துக் கொள்வதால் இருக்கின்ற பிரச்சினைகள் மேலும் அதிகமாகி நாடு வீழ்ச்சியடைந்து பயணிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உடுகம்பொல, பிரதேச சபை கேட்போர் கூடத்தில் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது (31) அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் பேசுகையில்,

அரசியல் யாப்புக்கு உடன்பாடாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அந்த நியமனத்தில் யாப்புக்கு முரணான எந்த விடயங்களும் இல்லை. இந்த நேரத்தில் நாடு பாரியதொரு பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. தற்போதைய தேவை இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டை ஸ்திரப்படுத்துவதாகும். அதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாங்கள் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தைக் கொடுக்க வேண்டும்.

பெரும்பாலானோருக்கு இருந்த ஆட்சி மாற வேண்டும் என்ற தேவை இருந்தது. அந்த குரலுக்கு செவிமடுத்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தமது பதவிகளில் இருந்து இராஜினாமா செய்தார்கள். இப்போது புதிய ஜனாதிபதி ஒருவர், புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது இருப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு. நாடு முகம் கொடுத்திருக்கின்ற பிரச்சினைகள் ஒவ்வொன்றாகத் தீர்த்துக் கொண்டு போகின்றது.



தற்போது எரிபொருள், உரம் மற்றும் வெளிநாட்டு உதவிகள் நாட்டிற்குக் கிடைக்கிறது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நல்ல பதில் கிடைத்திருக்கிறது. அந்த உதவித் தொகைகள் கிடைத்தால் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டால் இன்னும் சில மாதங்களுக்கு நாடு மீண்டும் நல்ல நிலையை அடையும்.

தற்போது பலர் ஜூலை 9 ஆம் திகதி போன்று ஆகஸ்ட் 9 ஆம் திகதி மக்களை கொழும்புக்கு அழைத்து போராட்டம் ஒன்றை நடாத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் பதவியில் இருந்து துரத்துவதற்கு தயாராகின்றார்கள்.

அதன் பின்னர் நாங்கள் யாரை நியமித்துக் கொள்வோம்? இப்படி மாதத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை புதிய ஆட்சியாளர் ஒருவரை தெரிவு செய்வதன் ஊடாக நாடு ஸ்திரமான நிலமையை நோக்கி பயணிக்காது. நாட்டின் அரசியல், பொருளாதாரம், சமூக நிலை ஸ்திரமடையாது. நாட்டிற்கு பணம் அனுப்ப வேண்டாம் என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேசத்திடம் கூறுகிறார்கள்.

நாங்கள் இந்த நயவஞ்சக அரசியலில் இருந்து மீள வேண்டும். தொடர்ந்தும் கட்சி, நிறம், மதம் என்று பிரிந்திருந்தால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. நாங்கள் ஆறுதலாக அரசியல் செய்வோம். அதற்காக இந்த நிமிடத்தில் இருந்து சகல கொள்கைகளையும் கைவிட்டு நாட்டுக்காக நாங்கள் ஒன்று சேர வேண்டும் என்றார்.

## டிப்பர் - மோ. சைக்கிள் மோதி விபத்து; மகள் பலி, தாய் காயம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

டிப்பர் வண்டியொன்று மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் தாயுடன் மோ. சைக்கிளில் பயணித்த மகள் சம்பவயிடத்திலேயே பலியாகியுள்ளதுடன் படுகாயமடைந்த தாய் ஆபத்தான நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் புத்தளம் பிரதான வீதியின் பண்டுளகம உபுள் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் (30) ஆம் திகதி மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 31 வயதுடைய இஹலவெவ ,சிராவஸ்திபுர பகுதியை வசிப்பிடமாக கொண்ட யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. உயிரிழந்த யுவதியின் தாயார் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### தலாவ பிரதேச சபையினால்

## குப்பைகள் அகற்றப்படுவதில்லை என பொதுமக்கள் தெரிவிப்பு

### எரிபொருள் கிடைக்கும் நாளில் அகற்றுவோம் என்கிறார் பிரதேச சபை தலைவர்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தலாவ பிரதேச சபையினால் திட்டமிட்டபடி குப்பைகள் அகற்றப்படாமையினால் தம்புத்தேகம நகரின் பல்வேறு இடங்களில் குப்பைகள் குவிந்துள்ளதாக நகர மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் தம்புத்தேகம நகருக்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் அதிகளவில் மக்கள் வருகின்றனர். அத்துடன் எரிபொருள் நெருக்கடி காரணமாக தற்போது அதிக அளவில் நகரில் மக்கள் வரிசையில் நிற்பதனை அவதானிக்க கூடியதாகவுள்ளதுடன் அதனால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் வியாபார நிலையங்களில் இருந்து அகற்றப்படுகின்ற கழிவுகள் சேர்வதனாலும் நகரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகவும் நகர மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் விரைவாக பரவும் இவ்வாறான பின்னணியில் இவ்வாறு குப்பைகள் அகற்றாமல் இருப்பது நோய் பரவுவதற்கு வாய்ப்பாக அமையும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அது தொடர்பில் தலாவ பிரதேச சபை தலைவர் இந்திக்க உதய குமாரவிடம் வினவிய போது: தலாவ பிரதேச சபை அத்தியாவசிய சேவை வகைக்கு உள்வாங்கப்படவில்லை என்பதனால் தம்புத்தேகம மற்றும் எப்பாவள எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விநியோகிப்பதில்லை. எமக்கு எரிபொருள் கிடைக்கும் நாளில் குப்பைகளை அகற்றுவோம். நகர மக்கள் எழுப்பும் குற்றச்சாட்டு நியாயமானது என்றார்.

## கொட்டராமுல்ல அல் - ஹிராவில் வழிகாட்டல் கருத்தரங்கு



**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

சிலாபம் கல்வி வலயப் பிரிவிலுள்ள தமிழ் மொழி மூலப்பாடசாலைகளில் கல்வி பயின்று 2021ம் ஆண்டுக்கான க.பொ.த சா.த பரீட்சைக்கு அண்மையில் தோற்றிய மாணவர்களுக்கான "க.பொ.த. உயர்தர பிரிவில் கல்வி பயில்வதற்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு" கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

கொட்டராமுல்லை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம்.ஜே.எம் றியாசத் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, களனி மற்றும் வவுனியா ஆகிய பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் கொட்டராமுல்ல மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் ஒன்றியத்தில் இணைந்து கொண்டு மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு இவர்கள் மாணவர்களுடன் கருத்துப் பரிமாறல்களையும் மேற்கொண்டனர்.

## புத்தளம் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றோருக்கு சான்றிதழ்




**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் ஸாலிஹீன் பள்ளி நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று முடிந்த இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாலிஹீன் பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது.

இப்போட்டி நிகழ்ச்சியில் மொத்தமாக 657 மாணவ மாணவிகள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். போட்டிகளில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் போட்டிக்குழு பொறுப்பாளரும், பள்ளிவாசல் பரிபாலன சபை தலைவருமான அஷ்ஷெய்க் ஏ.பி.எம்.ஜிப்னாஸ் (மிஸ்பாஹி) உள்ளிட்ட பள்ளிவாசல் பரிபாலன சபை உறுப்பினர்கள், புத்தளம் மன்பஹுஸ்ஸாலிஹாத் பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எம்.எம். ரியாஸ் (தேவ்பந்தி) உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### தென் மாகாணத்தில்

## டெங்கு நோயாளர்களாக 4648 பேர் கண்டுபிடிப்பு

### கடந்த வருடத்தை விட நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு என்கிறார் பணிப்பாளர்

**மாத்தறை தினகரன் நிருபர்**



தென் மாகாணத்தில் கடந்த வருடத்தைவிட இந்த வருட (ஏழு மாத காலத்தில்) டெங்கு நோய் வெகுவாக அதிகரித்துள்ளதாக தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் சந்தனசிறிதுங்க தெரிவித்தார்.

கடந்த வருடம் தென் மாகாணத்தில் டெங்கு நோயாளர்களாக 1980 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இத் தொகை இந்தவருடம் ஜூலை மாதம் வரை 4648 ஆக அதிகரித்துள்ளது.

காலி மாவட்டத்தில் 2696 டெங்கு நோயாளர்களும் மாத்தறை மாவட்டத்தில் 1006 டெங்கு நோயாளர்களும் ஹம்பாந்தோட்ட மாவட்டத்தில் 946 டெங்கு நோயாளர்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் காலி மாவட்டத்தில் 744 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 758 பேரும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 478 பேரும் டெங்கு நோயாளர்களாக கண்டுபிடிக்கப்பட்டனர்.

கடந்த ஏழு மாதகாலத்திற்குள் டெங்கு நோயினால் காலி மாவட்டத்தில் இரண்டு மரணங்களும் மாத்தறை மாவட்டத்தில் ஒரு மரணமும் பதிவாகியுள்ளன.

## நகர சபையால் துப்புரவு செய்யும் பணி முன்னெடுப்பு



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் - கொழும்பு முகத்திடல் உள்ளிட்ட கரையோர பகுதிகள் துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக்கின் பணிப்பின்பேரில் மேற்படி பகுதிகள் நகரசபையால் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டன.

டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார பிரிவினரின் ஆலோசனைகளைப் பெற்று புத்தளம் நகர பிதா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன்படி, புத்தளம் நகர சபைக்குட்பட்ட கிராமங்களில் உள்ள வீதியோர வடிகான்கள், குளப்பகுதிகள் மற்றும் வீதியின் இரு மருங்கு என்பன புத்தளம் நகர சபையால் தொடர்ச்சியாக துப்புரவு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமானத் பாடசாலையில் கல்விக் கண்காட்சி





**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை மருதானை அல் அமானத் இஸ்லாமிய ஆரம்ப பாடசாலையின் 2022 ஆம் ஆண்டிற்கான எக்ஸ்போ கல்விக் கண்காட்சி அதிபர் பஸ்லா முர்ஸி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலைப் பணிப்பாளரும் பேருவளை நகர சபை உறுப்பினருமான டில்சாத் அன்வரின் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை வங்கி பேருவளை கிளையின் முன்னாள் முகாமையாளரும் பிரபல எழுத்தாளருமான ரீ.எம். ஸபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். களுத்துறை நாகொட வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அதிகாரி டொக்டர் பசீர் முஸ்தபா, பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் பௌஸர் ஹுசைன் (நளீமி) உட்பட பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். சிறார்களின் கைப்பணி திறமைகளையும் பிரமுகர்கள் பார்வையிட்டதோடு அவர்களின் செயற்பாடுகளையும் பாராட்டினர்.



வென்னப்புவ தேர்தல் தொகுதியிலுள்ள போதலேகம பொது மைதானத்தில் சமையல் எரிவாயு விநியோகம் (28) சுமுகமான முறையில் நடைபெற்றது. பிரதேசவாசிகள் சமையல் எரிவாயு கொள்கலன்களை கியூ வரிசையில் நின்று பெற்றுக் கொண்டனர்.

படம்: நீர்கொழும்பு தினகரன் நிருபர்

# எல் பீ ்.பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ்.பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 434, ஈ.டபிள்யூ.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/05/12/19 செப்டம்பர் 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/06/13/20 செப்டம்பர் 2022 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 03/07/14/21 செப்டம்பர் 2022 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 47, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | பிரதான வீதி, பொத்துவில். |
| 08/15/22/26 செப்டம்பர் 2022 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | பிரதான வீதி கிரண். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 10, பருத்தித்துரை வீதி, நெல்லியடி. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | பிரதான வீதி, மல்லாவி |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல 3, 5 வல்லை வீதி சங்கானை. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 09/16/23/27 செப்டம்பர் 2022 | கண்டி வீதி, கொடிகாமம். |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ்.பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE
தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (இநிசஅ)

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### தகவல் தொழில்நுட்பவியல் சேவைகளை வழங்குவதற்காக நிறுவனமொன்றை வாடகைக்கமர்த்துதல்

### பெறுகை இல.: SEA/PD/IM/16-2022

1. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கு தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த கம்பனிகளிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் www/emerge/gov.lk என்ற இநிசஅ இன் இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்/ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுக்களை சமர்ப்பிக்க விரும்பும் ஆர்வமுள்ள சாரார்கள் 500 இலங்கை ரூபாவை இலங்கை வங்கியின் டொரிங்டன் சதுக்க கிளையிலுள்ள (453) 0074944408 என்ற பொதுவான கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத ரொக்கப் பணமாக செலுத்தலாம். மேலே குறிப்பிட்டுள்ள பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டின் பிரதியொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்று procurement.slsea@gmail.com and slseafinance@gmail.com என்ற இணையத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "Hiring a firm for supply of IT related services – SEA/PD/IM/16-2022" என குறிப்பிடப்பட்டு தலைவர், பெறுகைக் குழு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை. கொழும்பு-07 என்ற முகவரிக்கு 2022 ஓகஸ்ட் 23 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, 72 ஆம் இலக்கத்திலுள்ள இநிசஅ அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரம் முடிந்தவுடன் சமுகமளிக்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
3. மேலதிக விபரங்களை 011 2575030 என்ற தொலைபேசி இலக்கத்தை அலுவலக நேரங்களில் அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல.: 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**

**தொலைபேசி: 94 (0) 112575030. தொலைநகல்: 94 (0) 112682534**
**மின்னஞ்சல்: info@energy.gov.lk. இணையம்: www.energy.gov.lk**
**2022 ஓகஸ்ட் 03 ஆம் திகதியன்று.**

# கொழும்பு மாநகர சபை

## கேள்வி கோரல் அறிவித்தல்

கொழும்பு மாநகர சபையின் நகர முதல்வரினால், கொழும்பு மாநகர சபைக்கு உரித்தான வெற்று இறைச்சிக்கடைகளை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக முத்திரைக்குறி இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | விபரம் |
|---|---|
| CMC/MT/RV/TEND/MEAT/2 | 2022/2023 இரண்டாண்டுகளிற்காக கொழும்பு மாநகர சபைக்கு உரித்தான பொதுச் சந்தைகளின் வெற்று இறைச்சிக்கடைகளை வாடகைக்கு விடுவதற்காக நகல் பிரதிகளுடன் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. |

| சந்தை | வர்த்தக நிலைய இலக்கம் |
|---|---|
| பொரள்ள | 7B/55 (பன்றி இறைச்சி) 7B/36 (கோழி இறைச்சி) |
| தெமட்டகொட | 50/03 (மாட்டிறைச்சி) |
| டீன்ஸ் வீதி | 44/05 (மாட்டிறைச்சி) |
| கொள்ளுப்பிட்டி | 09 (ஆட்டிறைச்சி), 10 (மாட்டிறைச்சி) |
| பம்பலப்பிட்டி | 24 (மாட்டிறைச்சி) |
| வெள்ளவத்த | 01 (பன்றிஇறைச்சி) 02 (கோழிஇறைச்சி), 03 (ஆட்டிறைச்சி), 04 (மாட்டிறைச்சி) |
| ஜிந்துப்பிட்டி | 06 (கோழி இறைச்சி), 07 (ஆட்டிறைச்சி) |
| நாகலகம் வீதிய | 381/1 (கோழி இறைச்சி), 381/7 (கோழி இறைச்சி) 381/8 (பன்றி இறைச்சி) |
| கொஸ்கஸ்ஹந்திய | 10/04 (கோழி இறைச்சி) |
| கிருலப்பன | 146 (கோழி இறைச்சி) |

2022.08.03 முதல் 2022.08.24 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி கோரல் படிவங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01-** கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk என்ற இணையதளத்தில் தரஇறக்கம் செய்து கொள்ளல்.

- மீளளிக்கப்படாத படிவக் கட்டணமான ரூபா 2,240.00 இற்கான தொகையைப் பின்வரும் இரண்டு முறைகளில் செலுத்தலாம்.
  1. மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் நகர மண்டபக் கிளையின் கணக்கு இலக்கம் 167-1-001-6-3169425 இற்கு வைப்புச் செய்தல்.
  2. கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் அலுவலகக் கரும பீடங்களில் செலுத்துதல் மூலம்.
     - மாவட்டச் செயலகம் இல. 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பன, கொழும்பு-06
     - நீர் வழங்கல் மற்றும் வடிகான் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு-10
- கேள்வி ஆவணங்களுடன் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இணைத்து சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

**முறை 02-** நகர மண்டப பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல்.

கொழும்பு மாநகர சபையின், கொழும்பு-07, நகர மண்டப வளாகத்திலுள்ள மாநகர திறைசேரித் திணைக்களத்தின் வருமானப் பிரிவில் எழுத்துருவ விண்ணப்பமொன்றை முன்வைத்து, விண்ணப்பப்படிவக் கட்டணமான ரூபா 2,240.00 ஐச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளல்.

- 2022.08.24 அன்று பி.ப. 3.00 இன் பின்னர் உத்தியோக இணையத்தளம் அல்லது அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் இயலாது
- கேள்வியைச் சமர்ப்பிக்கும் வர்த்தக நிலையத்திற்கான கேள்வி வைப்புத் தொகையை 2022.08.25 அன்று பி.ப. 3.00 இற்கு முன்னர் மாநகர திறைசேரித்திணைக்களத்தின் வருமானப் பிரிவில் செலுத்துதல் வேண்டும்.
- உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல்பிரதிகளுடன் கூடிய விண்ணப்பங்கள் 2022.08.26 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர், கொழும்பு-07, நகர மண்டப வளாகத்தின் மாநகர செயலாளர் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.
- விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2022.08.26 அன்று மு.ப. 10.00 இற்கு முடிவுறுவதுடன், உடனடியாக அவை திறக்கப்படும். அனுமதி பெற்ற பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கப்படும் வேளையில் சமுகமளித்திருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- இது தொடர்பான மேலதிக விபரங்களை, 0112-692465 என்ற இலக்கத்தினூடாக பிரதி மாநகர பொருளாளர் (வருமானம்) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**ரோசி சேனாநாயக்கா**
**கௌரவ நகர முதல்வர்**
**கொழும்பு மாநகர சபை**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
LAKE HOUSE

# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2022/07/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2022/08/25 மற்றும் 2022/08/26 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 444 222

# அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட வத்தேகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமிய வங்கிக் கிளைகளில் 2021.03.31 ஆம் திகதி உட்பட அத்திகதி அடகு வைக்கப்பட்டு 2022.09.03 ஆம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகளை 2022.09.03ஆம் திகதி மு.ப.9.30 மணிக்கு வரையறுக்கப்பட்ட வத்தேகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கண்டி வீதி, இல.7ஏ, எனும் கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

வத்தேகம கிராமிய வங்கி
ஹுலுகங்கை கிராமிய வங்கி
கஹல்ல கிராமிய வங்கி
அலுத்கம கிராமிய வங்கி
அம்பதென்ன கிராமிய வங்கி
உடதலவின்ன கிராமிய வங்கி
மடுல்கெலை கிராமிய வங்கி
கெலேபொக்க கிராமிய வங்கி
மடவளை கிராமிய வங்கி
பன்விலை கிராமிய வங்கி
குடுகல கிராமிய வங்கி

**இப்படிக்கு**
**பொது மேலாளர்**
**வரையறுக்கப்பட்ட வத்தேகம பலநோக்குக் கூட்டுறவு சங்கம்**
**வத்தேகம**

## வ/ப பண்டாரவெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச செயற்குழுவின் தேர்வு – 2022

வரையறுக்கப்பட்ட பண்டாரவெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தல் இலக்கம் 707/14 மற்றும் 1992 மார்ச் 27 வர்த்தமானி அறிவித்தலின் திருத்தப்பட்ட இலக்கம் 297/7 மற்றும் 1977/12/28 திகதியிட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் மற்றும் 2011 இலக்கம் 3 என்ற ஊவா மாகாண கூட்டுறவுச் சங்க சாசனத்தின் பிரதேச செயற்குழுவைத் தேர்ந்தெடுப்பதற்காக பிரேரணைகளை ஏற்றுக்கொள்ளல் 2022.08.13 ஆம் திகதியும் வாக்கெடுப்பு 2022.08.20ஆம் திகதியும் மேற்கொள்ளப்படுமென அனைத்து அங்கத்தினர்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி கருமங்கள் நடைபெறும் நிலையங்கள், நேரம் மற்றும் ஏனைய விபரங்களை சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் அல்லது குறித்த பிரதேச முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தேர்வு அலுவலர்.டப்ளியு.ஏ.ஏ.சுமித்**
**வ/ப பண்டாரவெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல.04, பெரேரா மாவத்தை, பண்டாரவெல**

**2022.07.31ஆம் திகதி**

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 250 மெ.தொ. சோயா அவரைக்கான பெறுகை

### Bid No. SLTL/TB/10/2022

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 250 மெ.தொ. சோயா அவரையை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (உயர் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, விலைமனுதாரரானவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011 2236 588/ 011 2237 418.
5. 2022.08.19 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 30,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 படிவத்துடன் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து 0112236588/ 0112237418. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.08.22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அதாவது 2022.08.22 ஆம் திகதியிலிருந்து 2022.11.21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,531,250 ரூபா பெறுமதியானதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து அதாவது 2022.08.22 ஆம் திகதியிலிருந்து 2022.12.19 ஆம் திகதி வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் (2022.08.22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு).

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:**
**தலைவர்,**
**உயர் மட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த.பெட்டி 17, கப்புவத்த, ஜா-எல.**

### நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | கண்டி வடக்கு பாத்ததும்பர ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கோணிகொட பம்பி இல்லம் புதிய மின்பிறப்பாக்கி அறையை விரிவுபடுத்தலின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: **KNPIWSP/WORK/PC-04/2022-52** | 12,500/-+ VAT ** | ரூபா 210,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 21 மில்லியன் | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tel : 081-2492390<br>Fax : 081-2492286<br><br>கேள்வி முன்னோடிக் கூட்டம் மற்றும் வேலைத் தள விஜயம் 2022 ஆகஸ்ட் 24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் (கட்டாயமானது) | 31/08/2022 பி.ப. 2.00<br>03-08-2022ஆம் திகதி முதல் 23-08-2022ஆம் திகதி வரையில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில்) ஆவணங்கள் வழங்கப்படும் |
| 02 | நாடுகல களஞ்சிய முற்றவெளி மற்றும் டோர்ன்கீ கிராமம் ஹலல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Chain Link வேலியை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல:**RSC(S)/P&C/C/FENCES HALLALA, NADUGALA/ RH/2022-97** | 4000/-+ VAT | ரூபா 33,500/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 3.4 மில்லியன் | பிஓநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2222105<br>Fax 041-2221329 | 17/08/2022 பி.ப. 2.00 |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
